பக்கங்கள்: 12

விலை: 20 ரூபா

# காலைக்கதிர்
Kālaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆனி 02 திங்கட்கிழமை 17.06.2019 | கதிர் 224

## இது ரகசியம் அல்ல!

தமிழரசுக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன்.

கட்சியின் போக்குக் குறித்து பெரும் விசனம் தெரிவித்தார். என்ன விடயம் என்று நோண்டினேன். விவகாரம் வெளியே வந்தது.

பக்கம் 02 »

காலைக்கதிர்
Kalaikkathir

**அன்பு வாசகர்களுக்கு வணக்கம்.**

★ 2016 நவம்பர் 6ஆம் திகதி முதல் கடந்த இரண்டரை வருடங்களாக நாள் தவறாமல் ‘காலைக்கதிர்’ அச்சுப் பிரதியையும், ‘வட்ஸ்-அப்’, ‘வைபர்’, மின்னஞ்சல் ஆகியவை மூலம் இலத்திரனியல் பிரதியையும் பெற்று, வாசித்துத் திருப்தி அடைந்து வந்துள்ளீர்கள்.

★ தங்கு, தடையின்றி நாள் தோறும் 953 இதழ்கள் ‘காலைகதிர்’ தினசரி வெளிவந்துள்ளன.

★ மாறி வரும் நவீன தொழில்நுட்பத்துக்கு அமைய, செலவுகளைக் குறைத்து, அது தனது ஊடக மார்க்கத்தை மாற்றியமைக்கத் தீர்மானித்துள்ளது.

★ அதேசமயம் தன்னை நாடும் ஒவ்வொரு வாசகனையும் அவர்களின் ‘ஸ்மாட்’ தொலைபேசி வாயிலாக தினசரி நேரத்துடனும் அதிக பக்கங்களுடனும் இலவசமாகத் தேடிச் சென்று சந்திக்கும் ஒழுங்கு முறையையும் அது ஏற்படுத்திக் கொள்கின்றது.

★ அதன்படி ‘காலைக்கதிர்’ நாளிதழின் அச்சுப்பிரதி நாளை 18ஆம் திகதிக்குப் பின்னர் விற்பனைக்கு வராது. நாளை வெளிவரும் ‘காலைக்கதிர்’ இதழுக்குப் பின்னர் அச்சுப் பிரதிகள் பிரசுரமாவது இடைநிறுத்தப்படுகின்றது.

★ எனினும் ‘காலைக்கதிர்’ இதழை வாசிக்க விரும்பும் வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் - அவர்கள் எந்தத் தேசத்தில் இருந்தாலும் - இலங்கை நேரப்படி விடிகாலை 4 மணிக்கு முன்னர் இலவசமாக அதன் இலத்திரனியல் பிரதி தேடிவரும். - அதுவும் புதிய மெருகுடன்.

★ நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்:-
- உங்கள் மின்னஞ்சல் முகவரி, ‘வாட்ஸ் அப்’, ‘வைபர்’, முகப்புத்தகம் அல்லது அது போன்ற சமூக வலைத் தொடர்பில் ஏதேனும் ஒன்றின் விவரத்தை
**Kalaikkathirpaper@gmail.com**
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் முகவரிக்கு தினசரி விடிகாலையில் ‘காலைக்கதிர்’ தவறாது கிட்டும்.

★ அச்சுப் பிரதி ஊடான எமது தொடர்புகள் தற்காலிகமாகத் துண்டிக்கப்பட்டாலும் விரைவில் ‘காலைக்கதிர்’ வாராந்த இதழின் அச்சுப் பிரதி வடிவில் உங்களுடன் எமது தொடர்புகள் தொடரும் என நம்புகிறோம்.

வடக்கிலும், கிழக்கிலும், இலங்கை முழுவதிலும், புலம்பெயர் தேசங்களிலும் இருக்கும் எமது பல்லாயிரம் வாசகர்களையும் இலவசமாக விடிகாலையில் தேடிச்சென்று இலத்திரனியல் வடிவில் சந்திப்பதன் மூலம் ‘காலைக்கதிர்’ தனது அனைத்து வாசகர்களையும் ஒன்றிணைக்கும் என நம்புகிறோம்.

கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் எமது அச்சுப் பிரதிகளின் விற்பனையில் அதீத ஈடுபாடு காட்டிய எமது விநியோக அலுவலர்கள் மற்றும் விற்பனை முகவர்களுக்கு மனமார்ந்த நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரியப்படுத்துகின்றோம்.

நன்றி
நிர்வாகி

தொலைபேசி இல.
**021 222 3000**

# குற்றவாளிகளைக் காப்பாற்றுவதற்கே முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகல்!



### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றச்சாட்டு

மன்னார், ஜூன் 17

முஸ்லிம் அமைச்சர்களின் இராஜினாமா, ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் பயங்கரவாதிகள் அல்லது நேரடியாகக் குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும்.

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன்.

பக்கம் 11 »

# மைத்திரியிடம் கருத்து கேட்க தயாராகின்றது தெரிவுக் குழு!

### ஜனாதிபதி இருக்கும் இடத்துக்குச் சென்று அவரின் கருத்துக்களைப் பெற யோசனை

கொழும்பு, ஜூன் 17

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்துக்களையும் கேட்டறியத் தீர்மானித்துள்ளது என அறியமுடிகின்றது.

பக்கம் 11 »

# நாட்டின் அரசியல் ஸ்திரமற்ற நிலை! அரசு கவிழ்ந்து விடுமா என்று அச்சம்!!

### கரவெட்டி நிகழ்வில் சுமந்திரன் எம்.பி.





கொழும்பு, ஜூன் 17

நாட்டிலே அரசியல் சூழ்நிலை ஒரு ஸ்திரமற்ற நிலையில் இருக்கின்றது. எப்போது என்ன நடக்கும்? என்ன தேர்தல் வரும்? அரசு நிலைக்குமா அல்லது கவிழ்ந்து விடுமா? என்றெல்லாம் பல கேள்விகள் நாளாந்

பக்கம் 11 »

# கஜேந்திரகுமாருடன் இணைந்தால் சாதிக்கமுடியாததென ஒன்றில்லை!



### கொழும்பில் விக்கி அதிரடிக் கருத்து

கொழும்பு, ஜூன் 17

கஜேந்திரகுமார் அரசியலில் நல்ல இடத்தைப் பெறவேண்டும் என்றே நாங்களும் விரும்புகின்றோம். நாங்கள் சேர்ந்தால் எம்மால் சாதிக்க முடியாதது

பக்கம் 11 »

# நீராவியடி ஆலயப் பகுதியில் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டம்!



முல்லைத்தீவு, ஜூன் 17

செம்மலை, நீராவியடிப் பிள்ளையார் ஆலயப் பகுதியில் அமைக்கப்பட்ட விகாரையில் தென்பகுதிச் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பக்கம் 11 »

# மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் இருப்பதுதான் நல்லது

### ரிஷாத் பதியுதீன் கூறுகின்றார்



கொழும்பு, ஜூன் 17

எமது கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ளாமல் மீண்டும் அமைச்சுப் பதவிளை ஏற்றுக்கொள்

பக்கம் 11 »

# நல்லாட்சி அரசை நாம் கவிழ்த்தே தீருவோம்!

### இப்படிக் கூறுகின்றது மஹிந்த அணி

கொழும்பு, ஜூன் 17

இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அடைக்

பக்கம் 11 »

# கடலில் நீராடச் சென்ற மாணவன் மன்னார்க் கடலில் மூழ்கிச் சாவு!

மன்னார், ஜூன் 17

நண்பர்களுடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை நண்பகல் கடலில் நீராடச் சென்ற மாணவன் ஒருவன்

பக்கம் 11 »

# அமைச்சுப் பதவியை ஏற்குமாறு கபீர் காசிமிடம் கோரும் சஜித்

கொழும்பு, ஜூன் 17

அமைச்சுப் பதவியை மீண்டும் ஏற்று மக்களுக்கான சேவையை ஆற்ற முன்வருமாறு அமைச்சர்

பக்கம் 11 »

# மிரட்டுகின்றது கடும் வறட்சி! குடிதண்ணீருக்கு தட்டுப்பாடு!!

கொழும்பு, ஜூன் 17

இலங்கையை ஆட்டிப்படைக்க ஆரம்பித்துள்ள வரட்சியினால் சுமார் 500,000 பேர் குடிதண்ணீர்

பக்கம் 11 »

# பௌத்தர்களே இல்லாத ஊரில் விகாரை கட்டுவதை நிறுத்துக!

## கோருகின்றார் மனோ கணேசன்



கொழும்பு, ஜூன் 17

**இந்துக்களும் – பௌத்தாகளும் ஒற்றுமையாக இருப்பது நல்லது. அதற்கு முன்னா பௌத்தாகளே இல்லாத ஊரில் காணி பிடித்து விகாரை கட்டுவதை நிறுத்தவேண்டும். இதனை நான் அத்துரலிய ரத்தன தேரரிடம் கூறுவேன் என அமைச்சர் மனோ கணேசன் தனது உத்தியோகபூர்வ முக நூல் பக்கத்தில் எழுதியுள்ளார்.**

அதில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இந்து – பௌத்த ஐக்கியம் நல்லதே. ஆனால் அதற்கு நிபந்தனைகளாக, ஆளில்லாத ஊரில் காணி பிடித்து விகாரை கட்டுவதையும், தொல்பொருளாராய்ச்சியில் பௌத்த சிதைவுகளை வடகிழக்கில் தேடும்போது தமிழ் பௌத்த வரலாற்றை மறந்து விடுவதையும் நிறுத்தவேண்டும் என ரத்னதேரிடம் நான் இன்னும் சில தினங்களில் சொல்வேன். இந்த அடிப்படையில் அவருடன் கலந்துரையாடுவேன். அவர் என் நண்பர்தான். மூன்று வருடங்களாகச் சபையில் என்பக்கத்து ஆசனத்தில் தான் அவர் இருந்தார் – என்றார்.

# கன்னியா, நீராவியடியை ரத்ன தேரர் விடுவிப்பாரா?

## செல்வம் எம்.பி கேள்வி

அத்துரலிய ரத்னதேரர் உண்மை பேசும் மதகுருவாக இருந்தால் எமது மக்களுக்குரிய கன்னியா வெந்நீரூற்று மற்றும் நீராவியடி பிள்ளையாா் ஆலயப் பிரதேசங்களை நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்க நடவடிக்கை எடுப்பாரா எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வியெழுப்பியுள்ளார்.

வவுனியா, தோணிக்கல் ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்கு கம்பெரலிய வேலைத்திட்டத்தில் அமைக்கப்பட்ட அலுவலகம் மற்றும் கடினப்பந்து பயிற்சிக் கூடத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த அத்துரலிய ரத்ன தேரர் மிகவும் மோசமான கருத்துக்களை மக்களைக் கவர்வதற்காகப் பேசி முடித்திருக்கின்றார். தமிழ் மக்கள் புத்தர் கோவிலை விரும்பவில்லை என்றால் தாமே புத்தர் சிலையை எடுத்துவிடுவோம் எனவும் தெரிவித்துள்ளார்.

இது வேடிக்கையாக இருக்கின்றது. நாடாளுமன்றத்தில் எமது உறுப்பினர்கள் எமது பாரம்பரிய இடமான கன்னியா பிள்ளையார் ஆலய வளாகத்தில் புத்த கோவில் அமைக்கப்படுவது தொடர்பாகவும், முல்லைத்தீவு நீராவியடியில் பிள்ளையார் ஆலயத்தில் புத்தர் கோவிலை அமைப்பது தொடர்பாகவும் தமது ஆட்சேபனையையும் பல தடவைகள் தெரிவித்திருக்கின்றார்கள்.

இது ரத்ன தேரருக்குத் தெரியாதா? அல்லது தெரியாதது மாதிரி உள்ளாரா என்பது வேடிக்கையாக வுள்ளது. புத்தர் ஞானம் பெற்ற நாளான இன்றுகூட



நீராவியடியில் சிங்களவர்கள் புத்தல் கோவில் அங்கு வரவேண்டும் எனப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

ரத்னதேரர் உண்ணாவிரதத்துக்கு பின்னர் தமிழ் மக்கள் தன்னுடைய பேச்சைக் கேட்பார்கள் என நினைக்கின்றார். அவர் உடனடியாக செய்யவேண்டிய வேலை இந்த இரண்டு புத்தர் கோவில்களையும் அகற்றவேண்டும். உண்மை பேசும் மதகுருவாக இருந்தால் எங்கள் மக்களுடைய இரு பிரதேசங்களையும் நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கவேண்டும்.

எமது மக்கள் பாராம்பரியமாக புனிதத்துவத்துடன் வழிபடுகின்ற இடங்களை ரத்ன தேரர் உண்மையில் புத்த மதத்தைப் பின்பற்றுகின்றவராக, அதன் அடிப்படையோடு செயற்படுகின்றவராக இருந்தால் அவர் தன்னுடைய கவனத்தை செலுத்தி அந்த இடங்களை மீள எமது மக்களிடம் கையளிக்கவேண்டும் – என்றார். (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராக சஜித் களமிறக்கப்படார்!

## கூறுகிறார் எஸ்.பி.திஸாநாயக்க

கொழும்பு, ஜூன் 17

அமைச்சர் சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்கும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சியின் உயர்பீடத்துக்கு இல்லை என்று கூட்டு எதிரணி உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதற்காகத் தற்போதே பிரதான கட்சிகள் ஆயத்தமாகி வருகின்றன.

அந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் அமைச்சர் சஜித் பிரேமதாஸ, ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவார் என பலராலும் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில், இந்த விடயம் தொடர்பாக கண்டியில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே எஸ்.பி.திஸாநாயக்க இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சஜித் பிரேமதாஸவின் பெயரோ, கருஜயசூரியவின் பெயரோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் பெயரோ ஜனாதிபதி வேட்பாளருக்காக பரிந்துரைக்கப்படவில்லை.

ஆனால், எனக்குத் தெரிந்தவகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராகக் களமிறங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது தீவிர முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார் என்று மட்டும் விளங்குகின்றது. இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து தற்போது பாரிய எதிர்ப்பலைகளும் எழுந்துள்ளன.

எனவே, இதனால் அடுத்த தெரிவாக கருஜயசூரியவை களமிறக்குவதற்கான வாய்ப்புக்களே அதிகம் உள்ளன.

இதனைத் தவிர அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை களமிறக்கும் எண்ணம் அந்தக் கட்சிக்கு ஒருபோதும் இல்லை.

சஜித்திடம் அந்தப் பதவியைக் கொடுக்கும் அளவுக்கு அந்தக் கட்சியின் தலைவர்கள் எவரும் விரும்பமில்லை என்பதை அறியமுடிகிறது.

எம்மை பொறுத்தவரை யாரைக் களமிறக்கினாலும் நிச்சயமாக நாம் தோற்கடிப்போம். நாம் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பாரிய வெற்றியடைவோம் என்பது மட்டுமே உறுதியாகக் கூறமுடியும்.

இதற்காக ஒருங்கிணைந்த எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து சக்திமிக்க ஒருவரை வேட்பாளராக களமிறக்குவோம்.

அந்த வேட்பாளர் யார் என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் நாம் ஒன்றிணைந்து தீர்மானிப்போம் – என்றார். (ஐ)

# வேட்பாளராக நான் ரெடி கரு மீண்டும் அறிவிப்பு!

கொழும்பு, ஜூன் 17

ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்தால் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்குவதற்குத் தயார் எனச் சபாநாயகர் கருஜயசூரிய மீளவும் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி. செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வி ஒன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு இதுவரை தான் எந்த விண்ணப்பமும் முன்வைக்கவில்லை எனவும் கட்சியின் தலைமைத் துவத்துடன் தனது பெயர் பிரேரிக்கப்பட்டால் அது குறித்து ஆராயத் தயார் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உள்ள அனைத்து உறுப்பினர்களும் தனக்கு ஒருமித்து ஆதரவளிக்கும் பட்சத்தில் இது குறித்து தீர்மானிப்பார் என்றும் அவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இரண்டு வாரங்களுக்கு முன்னர் உள்ளூர் ஊடகம் ஒன்றுக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய இந்தக் கருத்தைத் தெரிவித்திருந்தார். இந்நிலையில் அவர் மீண்டும் அந்தக் கருத்தைத் தெரிவித்திருப்பது, ஜனாதிபதி தேர்தலில் களம் இறங்குவது தொடர்பாக அவருக்கு இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்துகின்றது.

மறுபுறத்தில், ரணில் விக்ரமசிங்க மற்றும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஆகியோரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பான எதிர்பார்ப்போடு காய்களை நகர்த்தி வருகின்றனர். இது ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் பலவீனமான நிலையை தோற்றுவிக்கும் வாய்ப்பை அதிகரிக்கக்கூடும் என்று அரசியல் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினம் இரவு 7.30 மணிமுதல் தமிழரசுக் கட்சியின் யாழ். மார்ட்டின் வீதி அலுவலகத்தில் ஒரு கூட்டம். கட்சியின் இளைஞரணியினருக்கும் கட்சியின் யாழ். மாவட்ட எம்.பிக்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் என்று கூறப்பட்டது.

ஆனால் சுமந்திரனையும், சிறிதரனையும் வறுத்தெடுப்பதற்கான முயற்சிதானாம் அங்கு அரங்கேறியது.

கட்சியின் யாழ். எம்.பிக்கள் நால்வரையும் – மாவை, சிறி, சரா, சுமா ஆகியோரை – கேள்வி கேட்டு நோண்டும் மேடையாக அதைப் பயன்படுத்தினராம் கூட்டத்தில் கலந்துகொண்ட – யாழ். மார்ட்டின் வீதி 'முதியவர்கள்' கூட்டத்தினால் கட்சியின் யாழ். மாவட்ட 'இளைஞர்கள்' என அடையாளம் காணப்பட்ட – 'பெரிசுகள்'.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே அதன் போக்கு விளங்கியதும், வேறு நிகழ்ச்சி இருப்பதாகக் கூறி அங்கிருக்காமல் கம்பி நீட்டினாராம் சரா எம்.பி.

ஆனாலும், மற்றவர்களை நோண்டுவதற்காகத் தமது கைப்பிள்ளையைக் கூட்டத்தில் விட்டுச் செல்ல அவர் தவறவில்லை.

சுமந்திரனுக்கு எதிராகவும் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அவர் பதிலடி மாதிரி ஓர் உரையை ஆற்றிவிட்டு புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

அடுத்து ஸ்ரீ எம்.பியின் 'டேர்ன்'. மாவை எம்.பியின் மகன் கலையமுதனும் தீவுப் பகுதியில் இருந்து ஒருவரும் ஸ்ரீ எம்.பியை இலக்கு வைத்தனர்.

*"உங்களை கிளிநொச்சியின் 'ஜமீன்தார்' என்கிறார்களாம். நீங்கள் மற்றவர்களை கிளிநொச்சிக்கு வந்து அரசியல் செய்ய விடமாட்டீர்கள் என்கிறீர்களாம்!"* – என்றெல்லாம் சரமாரியாகக் குற்றச்சாட்டுக்களை அடுக்கினார் மாவையின் மகன்.

தனக்கு மரியாதை கொஞ்சம் குறைவதாக உணர்ந்து கொண்ட ஸ்ரீதரன் பதிலுக்குச் சீறினார்.

*"நான்தலைவர் பிரபாகரனின் மாணவர் அணியில் இருந்து வந்தவன். அவர் காட்டிய கட்சியில் சேர்ந்தேன்.*

*"நான் பரம்பரைத் தமிழரசுக் கட்சிக்காரன் அல்லன். எனது அப்பா இந்தக் கட்சியில் இருக்கவில்லை. அப்பாவின் செல்வாக்கால் நான் கட்சிக்குவரவில்லை. 2009 இல்தான் கட்சிக்கு வந்தேன். எங்களைப் பிடிக்காவிட்டால் சொல்லுங்கள். வெளியேறி விடுகின்றோம்."*

*"எங்கள் தலைவர் இயக்கத்தை எப்படி நடத்திக் காட்டினாரோ அதே மாதிரித்தான் நான் கிளிநொச்சியில் கட்சி நடத்துகிறோம்."* – என்றெல்லாம் மாவையின் மகனுக்குக் காட்டமாகக் கொடுத்திருக்கின்றார் ஸ்ரீ எம்.பி.

சுமந்திரன் எம்.பியின் வலது கையாகத் தென்மராட்சியில் செயற்படுபவர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சயந்தன். அவர் கூட்டத்துக்கு வரவே இல்லை.

சுமந்திரன் அந்தக் கூட்டத்தில் இருந்து போன பின்னர் எழுந்த சரா எம்.பியின் கைப்புள்ளை, சயந்தன் குறித்துக் கொஞ்சம் விபரீதமாக விமர்சித்தார் என்று கேள்வி.

கூட்டத்தில் பார்வையாளராக இருந்த சி.வீ.கே.சிவஞானம், குலநாயகம், பரஞ்சோதி போன்ற மூத்த உறுப்பினர்கள் அசந்துதான் போனார்கள்.

தளபதி அமிர்தலிங்கம் காலத்தில் மாவட்ட சபையை ஏற்பதா, இல்லையா என்ற பலத்த சர்ச்சையை ஏற்படுத்திய – பல விபரீத விவாதங்கள் இடம்பெற்ற – தமிழரசுக் கட்சிக் கூட்டங்களை நேரில் பார்த்து அறிந்தவர்கள் அவர்கள்.

சனி இரவு மார்ட்டின் வீதியில் நடந்த கூட்டத்தின் போக்கு அவர்களை எல்லாம் உலுப்பித்தான் விட்டது.

குறுக்கே, குறுக்கே பேசிய மகன் உட்பட ஏனையோரை அடக்குவதற்கு "அப்படி என்றால் நாங்கள் எல்லோரும் கூட்டத்திலிருந்து வெளியேதான் போக வேண்டும்" என்ற தொனியில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவே கூறவேண்டிய நிலைமை ஏற்பட்டது.

*"இந்தக் கூட்டத்தைப் பார்த்து மிகுந்த மனவேதனைப் பட்டேன். யாரோ கட்டிய வீட்டில் இருக்கும் மூத்தவர்களை புதிதாக வந்தவர்கள் வெளியே துரத்துவது போன்ற உணர்வுதான் எனக்கு ஏற்பட்டது. இங்கு யாழ். கூட்டத்தில் மட்டுமல்ல, திருகோணமலையிலும் இதுதான் நடக்கின்றது."* – என்றார் கூட்டத்தில் பார்வையாளராகப் பிரசன்னமாகிஇருந்து, எதுவும் பேசாமல் மனம் நொந்து வெளியேறிய கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர்.

இந்தப் போக்கு தமிழரசுக் கட்சிக்கு நல்லதல்ல என்று நினைக்கிறேன்...!

- மின்னல் -

# இலங்கை சிங்கள நாடா என்பது குறித்து விவாதிப்பதும் அடிப்படைவாதமேதான்!

## அடித்துக் கூறுகின்றார் நாமல் எம்.பி.

கொழும்பு, ஜூன் 17

இலங்கை என்பது சிங்கள - பௌத்த நாடு என்பதில் சந்தேகம் இல்லை என்றும் இதனை விவாதத்துக்கு உள்ளாக்குவதும் ஒருவகையில் அடிப்படைவாதமே என்றும் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.



களுத்துறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

பௌத்தர்கள் விகாரைகளுக்குச் செல்லக்கூட அச்சமானதொரு சூழ்நிலைதான் இலங்கையில் தற்போது நிலவி வருகிறது. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்லவும் அஞ்சுகிறார்கள்.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இந்தச் சம்பவம் குறித்து முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டும் அரசு கண்டுகொள்ளாததன் விளைவாகவே இவை நேர்ந்துள்ளன.

தற்போது, இதுகுறித்து முறையான விசாரணைகளை மேற்கொள்ளாமல் ஒருவருக்கொருவர் மாறி மாறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

தெரிவுக்குழுவொன்றை அமைத்தார்கள். இதனால் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும் என்று கருதினால், தற்போது இருப்பதைவிட பிரச்சினைகள் பெரிதாகித்தான் உள்ளன. இது சாதாரண ஒரு விடயமல்ல.

சமூகத்தில் முறையான புரிந்துணர்வு இல்லாத காரணத்தினாலேயே அடிப்படைவாதிகள் உருவாகின்றார்கள்.

இந்த அடிப்படைவாதம் இன்று நாடாளுமன்றம்வரை சென்றுள்ளது. இலங்கை என்பது சிங்கள, பௌத்த நாடு என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. இதனை விவாதிப்பதுகூட ஒருவகையில் அடிப்படைவாதம் தான்.

சில அரசியல் தலைவர்கள் தமது தேர்தல் வெற்றிக்காகவும் அரசியல் எதிர்காலத்துக்காகவும் இனங்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முற்படுகிறார்கள். இவைதான் இன்று இலங்கையில் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன என்றார். (ஐ)

# சவூதியில் கைதானோரின் இல்லங்களை கிழக்கில் முற்றுகையிட்ட சி.ஐ.டியினர்!

கொழும்பு, ஜூன் 17

டுபாயில் இருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவர்களின் உறவினர் மற்றும் நண்பர்களின் வீடுகளைச் சோதனையிட ஆரம்பித்துள்ளது குற்றப் புலனாய்வுத் திணைக்களம்.

இன்ரபோல் மற்றும் சவுதி, இலங்கைப் புலனாய்வுத்துறையின் கூட்டு நடவடிக்கையின் மூலம் மத்திய கிழக்கில் வைத்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சூத்திரதாரிகள ஐவர் மடக்கிப் பிடிக்கப்பட்டிருந்தனர். நேற்றுமுன்தினம் அதிகாலை இவர்கள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் மூலவேராக இவர்களே இருந்தனர் என புலனாய்வு வட்டாரங்கள் கருதுகின்றன.

குறிப்பாக இதில் ரிழா என்ற இளைஞர் பொறியியலாளர் என்றும் ஏமனில் அவர் சிலகாலம் தொழில்புரிந்தபோது ஐ.எஸ். இயக்கத்துடன் தொடர்பு ஏற்பட்டுள்ளதாகவும் விசாரணையில் தெரிய வந்துள்ளது.


மொஹமட் மர்ஸூக் மொஹமட் ரிழா (வயது – 34) என்ற இவரின் மருதமுனை வீடு, உறவினர்களின் வீடுகளில் நேற்றுமுன்தினம் விசேட பொலிஸ் புலனாய்வுக்குழு சோதனை நடத்தியது. அத்துடன், அவரது நெருக்கமான உறவினர்கள் 8 பேர் கல்முனை பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு வாக்கு மூலம் பெறப்பட்டு வருகிறது. அழைக்கப்பட்டவர்களில் ஒருவர் ஊடகவியலாளர் ஆவார்.

வெளிநாட்டில் இருந்து இலங்கைக்குப் பெருமளவு பணம் வந்த விவகாரம் குறித்தும் புலனாய்வுத்துறை இரகசிய விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

நேற்றுமுன்தினம் இலங்கை கொண்டுவரப்பட்ட ஐவரும் – சஹ்ரான் குழுவின் உருவாக்கம், நடவடிக்கைகளின் பின்னணியிலிருந்து செயற்பட்டவர்கள் எனப் புலனாய்வு வட்டாரங்கள் கருதுகின்றன. கருத்துருவாக்கம், ஆலோசனைகளின் மூலம் சஹ்ரான் குழுவை இவர்களே வழிநடத்தினார்கள்என்றும்,தாக்குதலின் முன்பாக பாதுகாப்பாக இலங்கையிலிருந்து வெளியேறியிருந்தார்கள் என்றும் புலனாய்வுத்துறை சந்தேகிக்கிறது. (ஐ)

# கொழும்பில் வீசப்பட்டிருந்த புத்தர் சிலைகளால் பதற்றம்!





கொழும்பு, ஜூன் 17

கொழும்பில் இனவாதிகள் சிலரால் வீசப்பட்ட புத்தர் சிலைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன.

இராஜகிரிய, லேக்ரைவ் பகுதியிலுள்ள வடிகான் ஒன்றில் வீசப்பட்டிருந்த நிலையில் 12 புத்தர் சிலைகள் மீட்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் வேலையில் ஈடுபட்டிருந்த சிலர் சிலைகளை கண்டுள்ளனர். இது குறித்து உடனடியாக பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.விரைந்து செயற்பட்ட பொலிஸார் புத்தர் சிலைகளை மீட்டுள்ளனர்.

மோட்டர் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று புத்தர் சிலைகளை அங்கு வீசி விட்டுச் சென்றதை நேரில் பார்த்தவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவலை அறிந்த பிக்குமாரும் அந்தப் பகுதிக்கு சென்றமையால் அங்கு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. இதுவொரு திட்டமிட்ட இனவாதச் செயல் என்றும், இந்த நாசகார வேலையில் ஈடுபட்ட இனவாதிகளை உடனடியாகக் கைது செய்யுமாறும் தேரர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் நாரஹேன்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## சஹ்ரானுக்கு நெருக்கமானவர் வெலிமடையில் நேற்று கைது

கொழும்பு, ஜூன் 17

வெலிமடை ,சில்மியாபுர ,பதுர்தீன் மாவத்தையில் 21 வயது இளைஞர் ஒருவர் வெலிமடைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தேசிய தௌஹீத் ஜமாத் தலைவர் சஹ்ரானுடனும் அந்த அமைப்பின் இதர முக்கியஸ்தர்களுடனும் தொடர்பில் இருந்தார் எனக் கூறியே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெலிமடைப் பொலிஸார் இவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொள்ளையர் மீது துப்பாக்கிச் சூடு!

### ஹொரணையில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 17

ஹொரணையில் நிதி நிறுவனம் ஒன்றைக் கொள்ளையிட முயன்ற சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் .

ஹொரணை பாணந்துறை வீதியில் இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

காயமடைந்தவர் ஹொரணை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.அவரிடம் இருந்து போலிக் கைத்துப்பாக்கி ஒன்றும் மீட்கப்பட்டது. (ஐ)

## பொசனை முன்னிட்டு தானம் வழங்கும் நிகழ்வு



கொழும்பு, ஜூன் 17

பொசன் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் விசேட தானசாலைகள் அமைக்கப்பட்டுள்ளமையுடன், விகாரைகளில் விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன.

அந்தவகையில் பொசன் பௌர்ணமி தினத்தையொட்டி மலையகத்தில் பல பாகங்களிலும் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஹற்றனில் இளைஞர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஐஸ் கீரிம் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றதோடு, ஹற்றன் ஞாயிறு சந்தைத் தொகுதியின் ஏற்பாட்டில் பிரைட் ரைஸ் தானம் வழங்கப்பட்டது. ஹற்றன் ரயில் நிலையத்தின் அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட பிஸ்கட் வழங்கும் நிகழ்வு ரயிலில் பயணித்த பயணிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வவுனியாவில் பொசன் விசேட பூசை வழிபாடு

வவுனியா, ஜூன் 17

பொசன் போயா தினத்தை முன்னிட்டு வவுனியா விகாரைகளில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன.

வவுனியா நகரில் அமைந்துள்ள ஸ்ரீ போதிதக்சிணாராமய பௌத்த விகாரையில் விகாராதிபதி சியம்பலாகஸ்வெல விமல சாரநாயக்க தேரரின் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன. இதே போன்று மடுக்கந்த விகாரையிலும் விசேட பூஜைகள் இடம்பெற்றன.

இந்த பூசை வழிபாடுகளில் பௌத்தர்கள் மட்டுமன்றி மூவின மக்களும் கலந்து கொண்டதுடன், புத்தரிசி எடுத்து வந்து விகாரையில் தானமும் செய்தனர்.

அத்துடன் வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் குமுது பெரோ அவர்களின் வழிகாட்டலில் 21 ஆவது மற்றும் 56 டிவிசன் இராணுவத்தினர் கலந்து கொண்டதுடன் மூன்று மாடுகளையும் காணிக்கையாக வழங்கியிருந்தனர். (ஐ – 100)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## நேராக்க முடியாத நாய் வால்!

நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பார்கள்.

இருக்கின்ற அரசியலைக் குழப்பியடிக்க வேண்டும் என்ற அரசியல் தலைவர்களின் சிந்தனையும் அது போன்றதுதான் போலும்.

பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடத்துவது தொடர்பாக அரசமைப்பை மீறி தம்மிஷ்டப்படி நடவடிக்கை எடுத்து, உயர் நீதிமன்றத்தின் ஏகமனதான தீர்ப்பு மூலம் வாங்கிக் கட்டிக் கொண்ட நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதன் பின்னரும் திருந்தவில்லை என்றே தோன்றுகின்றது.

மீண்டும் ஒரு தடவை முற்கூட்டியே பொதுத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சியை அவர் ஆரம்பித்திருக்கின்றார் என்று கொழும்பில் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

நாட்டில் பொதுத் தேர்தலை எப்போது நடத்தலாம் என்பதற்குத் திட்டவட்டமான - தெளிவான - சட்ட ஏற்பாடுகள், அரசமைப்பு ஒழுங்கு முறைகள் உள்ளன. அவற்றில் மயக்கமோ, குழப்பமோ இல்லை.

தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தாமே முன்னின்று கொண்டு வந்த 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் இது தொடர்பான தெளிவான ஒழுங்கு முறைகளைக் கொண்டுள்ளது.

அதன்படி -

பொதுத் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு, புதிய நாடாளுமன்றம் ஒன்று கூட்டப்படுமானால், அது தானாக மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மையுடன் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி முற்கூட்டியே தேர்தலை நடத்தும்படி கோரினாலன்றி, முதல் நான்கரை ஆண்டு காலத்துக்கு அந்த நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

அந்த நாடாளுமன்றத்தின் நாலரை ஆண்டு பதவிக் காலம் முடிந்த பின்னர், அடுத்த எஞ்சிய - ஆறு மாத காலத்துக்குள் எப்போது வேண்டுமானாலும் நாடாளுமன்றைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு அழைப்பு விடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு என அந்த 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் கூறுகின்றது.

அப்படிப் பார்த்தால் -

2015 ஒகஸ்டில் நடந்த பொதுத் தேர்தலில் அமைக்கப்பட்ட தற்போதைய நாடாளுமன்றத்தை 2020 பெப்ரவரிக்கு முன்னர் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்துவதானால் இந்த நாடாளுமன்றம் அதற்கான தீர்மானம் ஒன்றை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற வேண்டும்.

ஆனால், இந்த நாடாளுமன்றம் தானாக அப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக் கோருவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

அப்படியாயின் -

2020 பெப்ரவரிக்குப் பின்னர் தான் இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்து, முற்கூட்டிய பொதுத் தேர்தலுக்கு ஆணையிடும் அதிகாரம் ஜனாதிபதிக்குக் கிட்டும். அதற்கு முன்னர் அந்த வேலையை ஜனாதிபதி பதவியில் இருப்பவர் செய்ய முடியாது. 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் அதனைத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கின்றது.

அப்படிப் பார்த்தால், இந்த ஆண்டு டிசெம்பர் 09 ஆம் திகதிக்கு முன்னர் அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய சட்ட ரீதியான கட்டாயத்தில் நாடு இருக்கையில், தற்போதைய தமது ஜனாதிபதி பதவிக் காலத்தில் இந்த நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் மைத்திரிபால சிறிசேனவுக்குக் கிடைக்கவே கிடைக்காது என்பது திண்ணம்.

ஆனால், அப்படி தமது பதவிக் காலத்தில் நாடாளுமன்றத்தைக் கலைத்து, ஒரு பொதுத் தேர்தலை முற்கூட்டியே நடக்கச் செய்து, தாம் பதவியில் இருந்து இறங்க முன்னர் தமது தற்போதைய 'அரசியல் எதிரியான' பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பதவியில் இருந்து இறக்கி விடத் துடியாய்த் துடிக்கிறார் மைத்திரியார்.

இந்த நோக்கத்தில் ஏற்கனவே ஒரு தடவை நாடாளுமன்றத்தைக் கலைத்து, முற்கூட்டியே தேர்தலுக்கு உத்தரவிட்டு, அதற்காக உயர்நீதிமன்றத்திடம் வாங்கிக் கட்டியவர் அவர்.

அவர் கலைத்ததாகக் கூறப்படும் நாடாளுமன்றம் எட்டு மாதங்கள் கடந்தும் இன்னும் இயங்குகின்றது. அவரது அந்தப் பிரகடனங்களை உயர்நீதிமன்றம் குப்பைக் கூடைக்குள் தூக்கிக் கடாசிவிட்டது.

ஆனாலும் மைத்திரியார் திருந்தவில்லை. மீண்டும் அந்த முயற்சியை ஆரம்பித்திருக்கின்றார்.

நாடாளுமன்றத்தை முற்கூட்டியே கலைப்பது தொடர்பில் மக்கள் கருத்தைக் கோரும் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றுக்கு அழைப்பு விடுப்பது குறித்து அவர் சிந்திக்கின்றார். இது தொடர்பில் சட்ட மா அதிபருடன் ஆலோசனை கலந்திருக்கின்றார் என்றும் தகவல்.

அவர் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தலாம். மக்கள் கூட அவ்வாறு முற்கூட்டியே பொதுத் தேர்தலை நடத்துவதற்கு சார்பாகத் தீர்ப்பளிக்கலாம்.

ஆனாலும், சட்ட ரீதியாக நாடாளுமன்றத்தை நேரத்துடன் கலைப்பதற்கான அதிகாரத்தையோ, அங்கீகாரத்தையோ, அத்தகைய மக்கள் தீர்ப்புத் தராது.

அதுவும் கூட ஜனாதிபதி மைத்திரியாருக்கு நன்கு தெரியும். தெரிந்திருந்தும் - பல நூறு கோடி ரூபாவை விரயம் செய்யக் கூடிய அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து அவர் மிக 'ஸீரியஸாக' இருக்கிறார்.

அதற்குக் காரணம் உண்டு. தாம் பதவியை விட்டு இறங்க முன்னர் பிரதமர் ரணிலுக்கு ஏதேனும் அரசியல் ரீதியான நெருக்கடியைக் கொடுக்க வேண்டும் என்ற ஒரே சிந்தனை தான் அது.

நாய் வாய் போல சுருண்டிருக்கும் அரசியல் பழிவாங்கல் சிந்தனையை நீக்குவது, வாலை நேராக்கும் முயற்சி போன்றது தான்!

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை: ஜனாதிபதி, பிரதமரையும் அழைக்க தீர்மானம்

கொழும்பு, ஜுன் 17

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணை செய்யும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவுக்கு, ஜனாதிபதி மற்றும் பிரதமரை அழைப்பது குறித்து கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சாட்சியம் வழங்க வரவழைப்பது குறித்து குழு உறுப்பினர்கள் மத்தியில் கலந்துரையாடல் இடம்பெற்றதாக பிரதிச் சபாநாயகரும் அந்தக் குழுவின் தலைவருமான ஆனந்த குமார சிறி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் தாங்கள் எந்தவொரு உறுதியான முடிவுக்கும் வரவில்லை என தெரிவித்த அவர், முதலில் பிரதமரையா அல்லது ஜனாதிபதியையா அழைப்பது எனத் தீர்மானிக்க வில்லை எனவும் கூறினார்.

எனினும் இந்தக் குழு பெரும்பாலும் ஜனாதிபதி மற்றும் பிரதமரை வரவழைக்கும் என அந்தக் குழுவின் உறுப்பினரும் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான நலிந்த ஜயதிஸ்ஸ உறுதிப்படுத்தியுள்ளார்.

அதாவது 19ஆவது திருத்தத்தின்படி, நாடாளுமன்ற தெரிவுக் குழு முன் ஜனாதிபதி வரவழைக்கப்படலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் பிரதமரை அழைப்பது உறுதி என்றாலும் ஜனாதிபதியை அழைப்பதில் உள்ள சட்டபூர்வமான தன்மை குறித்த உறுதியான நிலைப்பாடு இல்லை என்றும் மூத்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# தமிழ் பொலிஸ் பணியாளர்களை வடக்கில் உள்ளீர்க்க நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 17

வட மாகாணத்தில் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என வடக்கு மாகாணத்துக்கான சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் த. கணேசநாதன் தெரிவித்தார்.

அதற்கமைய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் மேலும் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

வடக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை காரணமாக தமிழ் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக பெண்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை பொலிஸாரிடம் தெரிவிப்பதற்கு மொழி பெரும் பிரச்சினையாக அமைந்துள்ளது.

இதன் காரணமாகச் சட்டத்தை அமுல்படுத்துவதில் பொலிஸ் திணைக்களம் பெரும் சவாலை எதிர்நோக்கியுள்ளது.



இதற்கு தீர்வு வழங்கும் முகமாகவே இம்முறை வடக்கு, கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளை பொலிஸ் திணைக்களத்தில் உள்ளீர்க்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன - என்றார். (ஐ)

# எதிர்ப்புகளை மீறி மீண்டும் கூடுகின்றது தெரிவுக்குழு!

கொழும்பு, ஜுன் 17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் எதிர்ப்பை மீறி செயற்பட்டு வரும் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் ஆறாவது அமர்வு நாளை பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காத்தான்குடி பொலிஸில் சேவையாற்றிய முன்னாள் பொறுப்பதிகாரி, தற்போதைய பொறுப்பதிகாரியும் சுபீ முஸ்லிம் அமைப்பின் பிரதிநிதிகளும் சாட்சியம் வழங்கவுள்ளனர்.

கடந்த ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி இடம்பெற்ற தாக்குதல்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்ற தெரிவுக்குழு இதுவரை ஐந்து தடவைகள் கூடியுள்ளது.

இதுவரை இடம்பெற்ற அமர்வுகளில் பாதுகாப்புச் செயலாளர் சாந்த கோட்டேகொட, தேசிய புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைமை அதிகாரி சிசிர மெண்டிஸ் மற்றும் நாலக டி சில்வா, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ, முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா அமைப்பின் தலைவர் ரிஸ்வி மௌலவி, காத்தான்குடி பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் மொஹம்மட் சுபெய், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா ஆகியோரிடம் சாட்சியம் பெறப்பட்டுள்ளன.

இவர்கள் வழங்கிய சாட்சியங்கள் மூலம் பல உண்மைகள் அம்பலமாகியுள்ளன. இதனையடுத்து நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எதிர்ப்புகளும் வெளியிடப்பட்டன.

குறிப்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவுக் குழுவின் செயற்பாடுகளை நிறுத்துமாறு கோரியிருந்தார்.

எனினும் சர்ச்சைகளுக்கு மத்தியில் குறித்த குழுவின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முல்லைத்தீவில் ஈரோஸ் அலுவலகம்




முல்லைத்தீவு, ஜுன் 17

ஈழப்புரட்சி அமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட கிளை நேற்று முன் தினம் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு சிலாவத்தை மாதிரிக் கிராமம் பகுதியில் அமைந்த இந்த அலுவலகத் திறப்பு நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட ஈரோஸ் அமைப்பின் செயற்பாட்டாளர் ஐயாமணி தலைமையில் நடைபெற்றது.

ஈழப்புரட்சி அமைப்பின் கிழக்கு மாகாண இணைப்பாளர் ராஜேந்திரா கிளையை நாடாவெட்டி திறந்து வைக்க அமைப்பின் மூத்த உறுப்பினர் நேசரட்ணம் அலுவலகத்தின் பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்தார். (ஐ)

## நாளை

18.06.2019
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம்: மூலம் பி.ப 12.44 வரை
திதி : பிரதமை பி.ப 3.13 வரை
அமிர்தசித்தம்
இராகுகாலம் : 2.53 - 4.23
சுப நேரம் : 10.23 - 11.53

# பொது வாக்கெடுப்புக்கு தயாராகிறார் சிறிசேன!

## நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்த முயற்சி



கொழும்பு, ஜூன் 17

**ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக, நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு மக்களின் அனுமதியைக் கோரும் பொது வாக்கெடுப்பு ஒன்றை நடத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.**

எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதிக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படவேண்டியுள்ள நிலையில், அதற்கு முன்னர் நாடாளுமன்றத்தேர்தலை நடத்தும் வகையில், பொதுவாக்கெடுப்புக்கு அழைப்பு விட ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார் எனக்கூறப்படுகிறது.

அவரது இந்த யோசனைக்கு, சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா சாதகமான கருத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

எனினும், ஜனாதிபதியின் சட்ட ஆலோசகர்கள் இந்த நகர்வு குறித்து சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர், நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கு அனுமதி கோரும் பொதுவாக்கெடுப்பை நடத்தும் இந்தத் திட்டத்துக்கு, ஐக்கிய தேசியக்கட்சியும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளன.

திட்டமிட்டபடி முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்தப்பட வேண்டும் என்று இந்தக் கட்சிகள் தெரிவித்துள்ளன. (ஐ)

# 'சோபா' சர்ச்சைக்குரிய பிரிவுகள்; பொம்பியோவுடன் பேசத் திட்டம்

கொழும்பு, ஜூன் 17

அமெரிக்கா முன்மொழிந்துள்ள சோபா உடன்பாட்டின் சர்ச்சைக்குரிய பிரிவுகள் தொடர்பாக கொழும்பு வரும், அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவுடன் பேச்சு நடத்தப்படும் என்று அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ எதிர்வரும், 27ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார்.



இதன்போதே, 'சோபா' உடன்பாட்டின் சர்ச்சைக்குரிய உட்பிரிவுகள் குறித்து அவருடன் கலந்துரையாடத் திட்டமிடப்பட்டுள்ளதாக, அரச வட்டாரங்கள் கூறியுள்ளன.

அமெரிக்காவுடன் 'சோபா' உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றன.

எனினும், 'சோபா' உடன்பாடு குறித்து முதன் முதலில் மஹிந்த ராஜபக்ஷ அரசுடனேயே அமெரிக்கா பேச்சு நடத்தியது என்று அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

அப்போது அமெரிக்காவுடன் பேசிய மஹிந்த ராஜபக்ஷ இப்போது, அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது முரணானது என்றும் அவர் கூறினார்.

அவரது ஆட்சிக்காலத்தில் முன்மொழிந்த அல்லது கையெழுத்திடப்பட்ட திட்டங்கள், உடன்பாடுகளுக்குப் பின்னர் அவர் எதிர்ப்புத் தெரிவிப்பது இது முதல்முறையல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# இரண்டாம் உலகப் போரில் மூழ்கிய கப்பலின் பாகங்கள் அகற்றிய வெளிநாட்டவர்கள் கைது!





மட்டக்களப்பு, ஜூன் 17

மட்டக்களப்பு – கல்லடி கடற்பகுதியில் 2ஆம் உலகப் போரின் போது, மூழ்கிய கப்பலின் பாகங்களைக் கழற்றிய வெளிநாட்டவர்கள் மூவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிமிருந்து கப்பல் பாகங்கள் மற்றும் பிக்கப் ரக வாகனம் ஒன்று மற்றும் கடலில் சுழியோடப் பயன்படுத்திய உபகரணங்களையும் கைப்பற்றியதுடன் அவற்றைத் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்தே கல்லடியில் உள்ள உல்லாசப் பயணிகள் விடுதியில் தங்கியிருந்த வெளிநாட்டுப் பிரஜைகள் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து கடலில் மூழ்கிய போர்க் கப்பலின் பல இலட்சம் ரூபா பெறுமதியான இயந்திரத்தின் பாகங்கள் மற்றும் அதனைக் கழற்றுவதற்காகச் சுழியோடி பயன்படுத்தும் ஒட்சிசன் சிலின்டர்கள் நீச்சல் உடைகள் உட்பட பல உபகரணங்கள் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த தந்தை, மகன் மற்றும் ஒஸ்ரியா வைச் சேர்ந்தவர் உட்பட மூவர் சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து நீர்கொழும்பு ஹோட்டல் ஒன்றில் தங்கியுள்ளனர். அவர்கள் பிக்கப் ரக வாகனம் ஒன்றில் மட்டக்களப்பு கல்லடிப் பகுதியில் வந்து தங்கி இந்தச் சட்டவிரோதமான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்.

இதனிடையே, கடந்த 7 வருடங்களாக விடுமுறையில் இங்கு வந்து இந்தக் கப்பல் தொடர்பாக நீரில் மூழ்கி அவதானித்து வந்துள்ளார்கள் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# மோடியின் பிறந்த நாளன்று நாமல் எம்.பிக்கு திருமணம்



கொழும்பு, ஜூன் 17

எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷவுக்கு செப்ரெம்பர் 17ஆம் திகதி திருமணம் நடைபெறவுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்தபோது, தனக்குத் திருமணம் நடைபெறவுள்ளது குறித்து அவர், தகவல் வெளியிட்டுள்ளார்.

செப்ரெம்பர், 17ஆம் திகதி தனக்கு திருமணம் நிச்சயிக்கப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ கூறியதும், எதற்காக அந்த நாளைத் தெரிவு செய்தீர்கள் என்று இந்தியப் பிரதமர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு நாமல், சாதாரணமாக ஒரு நாளைத் தெரிவு செய்தார் எனக் குறிப்பிட்டார்.

அப்போது, இந்தியப் பிரதமர் மோடி, ஏன் அவ்வாறு கேட்டேன் என்றால், அன்று தான், (செப்ரெம்பர் 17) எனது பிறந்த நாள் என்று மோடி பதிலளித்துள்ளார்.

**மணப்பெண் யார்?**

நாமல் ராஜபக்ஷவைத் திருமணம் செய்து கொள்ளவுள்ள மணப்பெண், நன்கு அறியப்பட்ட விளையாட்டு ஆர்வலரும், லங்கா ஸ்போர்ட்ஸ் ரைசனின் (எல்.எஸ்.ஆர்) நிறுவுநருமான திலக் வீரசிங்கவின் ஒரே மகள் ஆவார்.

இவரது, தாயார் அருணி விக்ரமரத்ன, தேசிய அளவிலான ஓட்ட சாம்பியனாவார். இவர்கள் ஒன்பது ஹோட்டல்களை நடத்தி வருகின்றனர். (ஐ)

# வவுனியா – மன்னார் வீதி போக்குவரத்துக்கு தடை

### பயணிகள் கடும் விசனம்



வவுனியா, ஜூன் 17

வவுனியா மன்னார் வீதியில் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை ஏற்படுத்திய குழியால் போக்குவரத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் வவுனியா பிரதேசத்தில் வீதியோரங்களில் குழிகள் தோண்டப்பட்டு நீர் குழாய்கள் பொருத்தப்பட்டு வருகின்றன.

நேற்றுமுன்தினம் இரவு குளுமாட்டுச் சந்திக்கு அண்மையில் வவுனியா மன்னார் வீதிக்கு குறுக்காக குழாய் பொருத்துவதற்காக பெரிய குழி தோண்டப்பட்டுள்ளதுடன் நேற்றுக் காலை வரை அந்த வேலை முடிவடையாமையினால் போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு ஏற்பட்டது.

வவுனியா – மன்னார் பிரதான வீதி அதிகளாவான போக்குவரத்து நிறைந்த வீதியாகக் காணப்படும் நிலையில் மாற்று வீதி தொடர்பான ஒழுங்கான தெளிவூட்டல்கள் வழங்கப்படாமல் நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை இந்த வேலையை மேற்கொண்டிருக்கின்றமை தொடர்பில் பயணிகள் விசனம் தெரிவித்தனர். (ஐ – 100)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 17

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

மண்டைதீவு, பூம்புகார், மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்கும்பான் நீர்ப்பாசனம், வெண்புரவி நகர் ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

கோவில்குளம் கிராமம் ஆகிய பிரதேசத்திலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## யாழ் வண்ணார்பண்ணைப் பிரிவில்

# வளர்ப்பு நாய்களுக்கு ஏ.ஆர்.வி. தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள வண்ணார்பண்ணை பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய்த்தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் வைத்து வழங் கப்படவுள்ளது.

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளலாம் என்று இவ் வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக 30 ரூபா செலுத்தப்படவேண்டும் என்றும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

**அந்த வகையில் நாளை செவ்வாய்க்கிழமை-**

*காலை 9 மணி முதல் 11 மணி வரை – பிறவுன் றோட் கலட்டி சந்தி.

*முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – வீரசக்தி விநாயகர் கோவிலடி சீனியர் ஒழுங்கை.

*பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – காமாட்சி பாலர் பாடசாலை

**நாளை மறுதினம் புதன்கிழமை–**

*காலை 9 மணி முதல் 11 மணி வரை – மெதடிஸ் மிஷன் பாடசாலை கலட்டி இராமநாதன் வீதி.

*முற்பகல் 11 மணி முதல் ஒரு மணி வரை – சைவ பரிபாலன சபை நீராவியடி.

*பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணி வரை – ஆரோக்கிய மாதா கோவிலடி சிவகுருநாதர் வீதி.

# கோவையைத் தொடர்ந்து மதுரையில் ஐ.எஸ். தொடர்புகள் பற்றி விசாரணை

## தேசிய புலனாய்வுத்துறை அதிகாரிகள் மும்முரம்




மதுரை,ஜூன்27

கோவையை தொடர்ந்து மதுரையிலும் தேசிய புலனாய்வுத் துறை (என்.ஐ.ஏ) அதிகாரிகள் சர்வதேச இஸ்லாமியப் பயங்கரவாதிகளுடன் தொடர்புடையோர் எனச் சந்தேகிக்கப்படுவோர் சம்பந்தமான சோதனையில் ஈடுபட்டு உள்ளனர்.

இலங்கையில் கடந்த ஏப்ரலில் ஈஸ்டர் பண்டிகையன்று தேவாலயங்கள் மற்றும் நட்சத்திர ஹோட்டல்களில் சக்திவாய்ந்த தொடர் குண்டு வெடிப்புகள் நடந்தன. இதில் 250க்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். 500க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர்.

இலங்கைத் தாக்குதலுக்கு மூளையாகச் செயல்பட்ட பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த சஹ்ரான் ஹாசிமினுடன் சமூக வலைத் தளங்கள் மூலம் கோவையைச் சேர்ந்த சிலர் தொடர்பு கொண்டிருந்தமை தெரியவந்தது.

இதைத்தொடர்ந்து தேசிய புலனாய்வு அதிகாரிகள் கடந்த 12 ஆம் திகதி கேரள மாநிலம் கொச்சியில் இருந்து கோவை வந்தனர். அவர்கள் கோவை உக்கடம் பகுதியில் 7 இடங்களில் ஒரே நேரத்தில் சோதனை நடத்தி தோட்டாக்கள், செல்போன்கள் மற்றும் பல்வேறு மின்னணு சாதனங்களை பறிமுதல் செய்தனர்.

இதற்கிடையில் கோவையைச் சேர்ந்த 3 பேர் தடை செய்யப்பட்ட பயங்கரவாத ஐ.எஸ். அமைப்பிற்கு ஆதரவாக செயல்படுகின்றனர் எனக் கோவை மாநகர நுண்ணறிவு பொலிஸார் மற்றும் சிறப்பு நுண்ணறிவு பிரிவு (எஸ்.ஐ.சி.) பொலிஸாருக்கு இரகசியத் தகவல்கள் கிடைத்தன.

அதன்பேரில் கடந்த 13 ஆம் திகதி கோவை தெற்கு உக்கடம் அன்பு நகரைச் சேர்ந்த ஷாஜகான் (வயது 25), கோவை வின்செண்ட் சாலையில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் முகமது உசேன்(25), கோவை கரும்புக் கடை சாரமேடு பகுதியைச் சேர்ந்த ஷேக் சபியுல்லா (36) ஆகிய 3 பேரின் வீடுகளில் கோவை பொலிஸார் சோதனை நடத்தினர்.

விசாரணையில் அவர்கள் 3 பேரும் மருந்து விற்பனை பிரதிநிதிகளாகப் பணியாற்றி வருகின்றமை தெரிய வந்தது. பொலிஸாரின் சோதனையில் 3 பேரின் வீடுகளில் இருந்தும் செல்போன்கள், சிம் கார்டுகள், கணினி ஹார்ட் டிஸ்குகள், பென் டிரைவ், மெமரி கார்டுகள் மற்றும் வங்கி கணக்கு ஆவணங்கள், தடை செய்யப்பட்ட அமைப்புகளைப் பற்றிய கையேடுகள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

அப்போது, 3 பேரின் வீடுகளில் இருந்து பறிமுதல் செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் நடத்தப்பட்ட விசாரணையில் அவர்கள் ஐ.எஸ். ஆதரவாளர்கள் என்ற குற்றச்சாட்டு நிரூபணமானது.

இதைத்தொடர்ந்து ஷாஜகான், முகமது உசேன், ஷேக் சபியுல்லா ஆகிய 3 பேரையும் பொலிஸார் நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் கைது செய்தனர். அவர்களை வானில் ஏற்றி கோவை ரேஸ்கோர்ஸில் உள்ள மாவட்ட முதன்மை நீதிபதி சக்திவேல் வீட்டுக்குப் பொலிஸார் அழைத்துச் சென்று ஆஜர்படுத்தினார்கள்.

இதை தொடர்ந்து அவர்கள் 3 பேரையும் வருகிற 28 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க நீதிபதி சக்திவேல் உத்தரவிட்டார். இந் நிலையில், கோவையை தொடர்ந்து மதுரையிலும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் நேற்றுமுன்தினம் முதல் சோதனையில் ஈடுபட்டு உள்ளனர்.

மதுரை வில்லாபுரம் பகுதியைச் சேர்ந்த சதகதுல்லா என்ற இளைஞரை இரகசிய இடத்திற்கு அழைத்துச்சென்று நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவரிடம், இலங்கை குண்டு வெடிப்புதாக்குதலில் தொடர்புடைய ஐ.எஸ். ஐ.எஸ். கும்பலுடன் உள்ள தொடர்பு பற்றி விசாரணை நடத்தப் பட்டு வருகிறது. (உ)

# பீகாரில் பரவுகிறது மூளைக் காய்ச்சல்

## இதுவரை 80 பேர் பலி



முசாபர்பூர்,ஜூன்17

பீகாரில் மூளை காய்ச்சலுக்குப் பலியானோர் எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்து உள்ளது.

பீகார் மாநிலம் முசாபர் நகரில் மூளைக் காய்ச்சல் நோய் குழந்தைக ளிடையே பரவி வருகிறது. கடந்த ஜனவரியில் பரவத் தொடங்கிய இந்நோய் கோடை காலத்தில் அதிக பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இதில், கடந்த மாதத்தில் 11 பேர் வரை உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை தொடர்ந்து உயர்ந்து கடந்த 2 நாள்களுக்கு முன் 41 ஆக உயர்ந்தது. அதன்பிறகு முசாபர்பூர் மாவட்டத்தில் மேலும் 2 குழந்தைகள் உயிரிழந்தனர்.

ஆனால் பீகாரின் ஆளும் நிதீஷ்குமார் அரசு, குறைந்த சர்க்கரை அளவால் அவர்கள் இருவரும் உயிரிழந்தனர் எனத் தெரிவித்தது.

பீகாரின் முசாபர்பூர், கயா ஆகிய மாவட்டங்களில் நோய் தாக்கம் அதிக அளவில் உள்ளது. 'அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட்ரோம்' மற்றும் 'ஜப்பான் என்சபிலிட்டிஸ்' என 2 வகையான மூளைக் காய்ச்சல் பரவி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதில் முசாபர்பூர் பகுதியில் அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட்ரோம் மூளைக்காய்ச்சலும் கயா பகுதியில் ஜப்பான் என்சபிலிட்டிஸ் மூளைக்காய்ச்சலும் பரவி இருக்கின்றன.

நோய் பாதிக்கப்பட்டு 117 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். அவர்களில் பலருடைய நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. இந்நிலையில், மருத்து வமனையில் சேர்க்கப் பட்டு இருந்தவர்களில் இன்றும் 3 பேர் உயிரிழந்து உள்ளனர். இது வரை இந்நோய்க்கு பலியானவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள்ளது.

# இந்தியா மீது வர்த்தக நடவடிக்கை இப்போதைக்கு அமெ. எடுக்காதாம்



வொஷிங்டன்,ஜூன் 17

வர்த்தக ரீதியாக இந்தியாவுக்கு எதிராக இப்போதைக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சீனாவுக்கு எதிராக மேற்கொண்டதைப் போல இந்தியாவுக்கு எதிராகவும் அமெரிக்கா வர்த்தகப் போர் தொடுக்க உள்ளதாக தகவல் வெளியான நிலையில், இந்தியாவுக்கு எதிராக இப்போதைக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அமெரிக்க வர்த்தக சட்டத்தின் 301 ஆவது பிரிவின் கீழ், 2017 ஆம் ஆண்டு அமெரிக்க வர்த்தகத்துறை அலுவலகம் சீனாவுக்கு எதிராக விசாரணையைத் தொடங்கியது.

வர்த்தக ஒப்பந்தம் மீறப்படுகிறதா, அமெரிக்க வர்த்தகத்திற்கு இடையூறு ஏற்படுத்தப்படுகிறதா என்பன குறித்து விசாரணை நடத்தப்பட்டதைத் தொடர்ந்தே, அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் வர்த்தகப் போர் மூண்டு இரு நாடுகளும் மாறி மாறி வரி விதிப்பை அதிகப்படுத்தின.

இதே காலகட்டத்தில், இந்தியாவில் இருந்து இறக்குமதியாகும் உருக்கு மற்றும் அலுமினியத் திற்கும் அமெரிக்கா வரிகளை விதித்தது. இதற்கு பதிலடியாக, அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அப்பிள், பாதம் பருப்பு, வால்நட், அக்ரூட் பருப்புகள் உள்ளிட்ட 29 பொருள்கள் மீதான வரி விதிப்பை அதிகரிக்க இந்தியா கடந்த ஆண்டு ஜூனில் முடிவு செய்தது.

இருப்பினும் இருதரப்பு பேச்சுகள் நடைபெற்று வந்தமையால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்நிலையில், 29 அமெரிக்க பொருள்கள் மீதான வரி உயர்வை இன்று முதல் நடைமுறைப்படுத்த இந்தியா முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியப் பொருள்கள் வரி விலக்கு பெற உதவிய, வர்த்தக முன்னுரிமை நாடு என்ற அந்தஸ்தை அமெரிக்கா ரத்து செய்ததால், இந்தியா இந்த முடிவை எடுத்திருப்பதாக கூறப்படுகிறது.

அதேசமயம், இந்தியாவுக்கு எதிராக 301 ஆவது பிரிவின் கீழ் அமெரிக்க வர்த்தகத் துறை விசாரணை செய்ய இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகின.

இந்தியச் சந்தையை சமமாகவும் நியாயமாகவும் அணுக இந்தியா அனுமதிக்கவில்லை என்று குற்றம்சாட்டியே, வர்த்தக முன்னுரிமை நாடு என்ற அந்தஸ்தை அமெரிக்கா பறித்த நிலையில், இதே காரணங்களுக்காக 301 ஆவது பிரிவின் கீழும் விசாரணை நடத்தக்கூடும் என கூறப்பட்டது.

ஆனால் வர்த்தக ரீதியாக இந்தியாவுக்கு எதிராக இப்போதைக்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது என அமெரிக்க வர்த்தகத்துறை அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேசமயம், அமெரிக்கபொருள்களுக்கு அதிக வரி விதிக்கப்படுகிறது, இந்திய சந்தையை அணுகுவதில் இடையூறுகள் இருக்கின்றன என்ற அதிருப்தியை தொடர்ந்து இந்தியாவிடம் தெரிவித்து வருவதாகவும் அமெரிக்க வர்த்தகத்துறை அலுவலகம் கூறியுள்ளது.

# பலத்த காற்றில் பெயர்ந்தது அரசு பஸ்ஸின் மேற்கூரை!

## பொள்ளாச்சி அருகே சம்பவம்



தமிழ்நாடு பொள்ளாச்சி அருகே பலத்த காற்று காரணமாக அரசு பஸ்ஸின் மேற்கூரை பெயர்ந்து விழுந்தது.

கோவை மாவட்டம் வடக்கிபாளையத்தில் இருந்து பொள்ளாச்சி நோக்கி சென்ற அரசு பஸ் ஒன்று, கொங்குநாட்டன் புதூர் பிரிவு வழியாக சென்றது. அப்போது பலத்த காற்றின் காரணமாக பேருந்தின் மேற் கூரை திடீரென பெயர்ந்து விழுந்தது.

இதையடுத்து உடனடியாக பஸ் நிறுத்தப்பட்டு, மேற் கூரையைச் சரிசெய்யும் பணியில் போக்குவரத்து ஊழியர்கள் ஈடுபட்டனர். சில மணி நேரங்களில் மேற்கூரை சீரமைக் கப்பட்டதையடுத்து, பஸ் பணிமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அதில் பயணித்த பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படாத நிலையில், அனைவரும் மாற்று பஸ்ஸில் அனுப்பிவைக்கப் பட்டனர். (உ)

# நியூஸிலாந்தில் நேற்று சக்திமிக்க நிலநடுக்கம்

## சுனாமி எச்சரிக்கை விடப்பட்டு வாபஸ்

வெலிங்டன்,ஜுன்17

நியூஸிலாந்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அந்த எச்சரிக்கை அறிவிப்பு பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

நியூஸிலாந்தில் நேற்றுக் காலை சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவு கோலில் 7.4 ஆக பதிவானது.

நிலநடுக்கம் மக்கள் அதிகம் வசிக்காத கெர்மடெக் தீவு பகுதிகளில் இருந்து வடக்கே ஏற்பட்டு உள்ளது. கடலோர பகுதிகளில் கடுமையான மற்றும் தீங்கு விளைவிக்கும் அளவில் சுனாமி அலைகள் இருக்கும் என தொடக்கத்தில் எச்சரிக்கை செய்யப் பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப் பட்டனர்.

பின்னர் இதனால் நியூஸி



லாந்துக்கு எந்தப் பாதிப்பும் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டது. இந்நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகள் அல்லது பொருள்சேதம் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளிவரவில்லை.

# 9மணி நேரம் ஒன்றாக இருந்தும் கூட பேசிக் கொள்ளாத மோடி -இம்ரான்!



பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் இருவரும் 9 மணி நேரம் ஒரே மாநாட்டு மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். ஆனால் பேசிக்கொள்ளவில்லை.

இரண்டு நாட்கள் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் பங்கேற்க சென்ற உலக நாட்டு தலைவர்கள், உச்சி மாநாட்டின் போது ஒரே இடத்தில் கூடினர். அப்போது, இந்தியப் பிரதமர் மோடியும் பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கானும் ஒரே இடத்தில் இருந்தனர். இருவரும் பரஸ்பரம் நலம் விசாரித்துக்கொண்டதோடு, மீண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டமைக்காக மோடிக்கு இம்ரான் கான் வாழ்த்துக்களைத் தெரிவித்தார் எனத் தகவல்கள் கூறுகின்றன.

மாநாட்டில் பங்கேற்ற தலைவர்களுக்கு, கிர்கிஸ்தான் அதிபர் வியாழக்கிழமை இரவு விருந்தளித்தார். அப்போது, பரஸ்பரம் தலைவர்கள் கைகுலுக்கி பேசிக் கொண்டனர்.

மாநாடு நடைபெற்ற அரங்கில் மோடியும், இம்ரான்கானும் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். இந்தச் சந்திப்பு நடைபெற்றதை, அதிகாரிகள் வட்டம் உறுதி செய்துள்ளது. ஆனால் இருவருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக் குறித்த எந்த தகவலும் இல்லை.

ஷாங்காய் மாநாட்டின் போது, மோடியுடன் பேச்சு நடத்த பாகிஸ்தான் ஆர்வம் காட்டியது. ஆனால், பாகிஸ்தான் பயங்கரவாதத்தை ஆதரிப்பதை முழுமையாக கைவிடாதவரை, பேச்சு நடத்தப் பட வாய்ப்பு இல்லை என்று இந்தியா திட்டவட்டமாகத் தெரிவித்து விட்டது.

2 நாட்களாக நடைபெற்ற இந்த மாநாட்டில் இந்தியாவின் பிரதமர் நரேந்திர மோடி, பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் இருவரும் 9 மணி நேரம் ஒரே மாநாட்டு அறையில் அமர்ந்திருந்தனர். இருவரும் நேருக்கு நேருக்கு அமர்ந்திருந்தாலும் இருவருக்கு மான பேச்சு என்பது வெறும் சிரிப்பு மட்டுமே தவிர வேறில்லாமல் இருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# சீன அதிபரின் பிறந்த தினத்தை சேர்ந்து கொண்டாடிய புடின்!



தஜிகிஸ்தானில், பிறந்த நாள் கொண்டாடிய சீன அதிபருக்கு, ரஷ்ய அதிபர் புடின் ஐஸ்கிரீம்களைப் பரிசாக வழங்கினார்.

தஜிகிஸ்தானில் நடந்த மாநாட்டில் பங்கேற்க உலக நாட்டுத் தலைவர்கள் அங்கு சென்றிருந்தனர்.

இதில் பங்கேற்க சென்றிருந்த சீன அதிபர் சி ஜின்பிங் மற்றும் ரஷ்ய அதிபர் புடின் ஆகியோர் தூன்பேயில் (Dushanbe) உள்ள ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று ஜின்பிங்கின் 66 ஆவது பிறந்த தினம் என்பதை நினைவு கூர்ந்த அவரது நெருங்கிய நண்பரான அதிபர் புடின், அவருக்கென சிவப்பு மற்றும் மஞ்சள் நிற பூ அலங்காரத்துடன் கேக் ஒன்றை ஓடர் செய்து, அதில் 'குட் பார்டியூன் டபுள் சிக்ஸ்' எனக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் ஜின்பிங்குக்கு வாழ்த்துத் தெரிவித்த புடின், பரிசாக பெட்டி நிறைய ஐஸ் கிரீம்களையும் வழங்கினார்.

# 75 ஆண்டுகளுக்கு முன் அமெ. வீசிய 100 கிலோ குண்டு பேர்லினில் மீட்பு!

## பாதுகாப்பாகச் செயலிழக்கச் செய்யப்பட்டது



பேர்லின்,ஜுன்17

இரண்டாம் உலகப்போர் 1939 - 1945 ஆண்டுகளில் நடைபெற்ற போது. ஜேர்மனியின் பெர்லின் நகரில் அமெரிக்கா போட்ட 100 கிலோ எடை கொண்ட இராட்சத வெடிகுண்டு வெடிக்காத நிலையில் அலெக்சாண்டர்பிளாட்ஸ் சதுக்கத்தில் கண்டெடுக்கப்பட்டது. இது அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வெடிகுண்டை செயலிழக்க வைக்க பொலிஸார் நேற்று முன்தினம் அதிகாலை நேரத்தில் நடவடிக்கை எடுத்தனர்.

இதற்காக அந்தப் பகுதியில் வசித்து வந்த சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வெளியேற்றப்பட்டனர். போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து அந்த வெடிகுண்டை, வெடிகுண்டு செயலிழப்பு நிபுணர்கள் பாதுகாப்பு முன்னெச்சரிக்கையுடன் செயலிழக்க வைத்தனர்.

அதிகாலை 1.45 மணிக்கு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை, எந்த பாதிப்பும் இன்றி வெற்றிகரமாக நடந்து முடிந்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

# மக்களின் எழுச்சிப் போராட்டத்துக்கு அடிபணிந்தது ஹொங்கொங் நிர்வாகம்

## குற்றவாளிகளை சீனாவுக்கு நாடு கடத்தும் சட்டப் பிரேரணை இடைநிறுத்தப்பட்டது



ஹொங்கொங்,ஜுன்17

ஹொங்கொங்கில் குற்றவாளிகளை சீனாவுக்கு நாடு கடத்துவது தொடர்பான சர்ச்சைக்குரிய நாடாளுமன்றப் பிரேரணை மக்கள் போராட்டம் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

இங்கிலாந்தின் கொலனி நாடாக இருந்து வந்த ஹொங்கொங் 1997 ஆம் ஆண்டு முதல் சீனாவின் சிறப்பு நிர்வாக பகுதிகளில் ஒன்றாக மாறியது. அது முதல், சீனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் இந்த நாடு உள்ளது.

இந்த நாட்டின் தலைமை நிர்வாக தலைவராக கேரி லாம் உள்ளார்.

இந்த நிலையில், அங்கு குற்ற வழக்குகளில் சிக்குகிறவர்களை சீனாவுக்கு நாடுகடத்தி, அங்கு வழக்கு விசாரணையை சந்திக்க வைக்க ஏதுவாக கைதிகள் பரிமாற்ற சட்டத்தில் திருத்தம் கொண்டு வர ஹொங்கொங் நிர்வாகம் முடிவு செய்தது. ஆனால் இது, ஹொங்கொங் மக்களிடையே பெரும் கொந்தளிப்பையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியது.

கடந்த 9 ஆம் திகதி ஹொங்கொங்கில் லட்சக்கணக்கான மக்கள் போர்க்கோலம் பூண்டு, வீதிகளில் இறங்கி மாபெரும் போராட்டம் நடத்தினர். இந்த போராட்டத்தால் ஹொங்கொங்கே குலுங்கியது.

இருப்பினும், இந்த சட்ட திருத்த பிரேரணையை நிறைவேற்றுவதில் தலைமை நிர் வாக தலைவர் கேரி லாம் உறுதியாக இருந்தார்.

இதன் காரணமாக கடந்த 12 ஆம் திகதி நடந்த போராட்டத்தில் பெரும் வன்முறை மூண்டது. போராட்டக்காரர்களை பொலிஸார் தடியடி நடத்தி, கண்ணீர்ப்புகை குண்டுகளை வீசி விரட்டியடிக்கின்ற நிலை ஏற்பட்டது.

1997 ஆம் ஆண்டு சீனாவின் கட்டுப்பாட்டின் கீழ் ஹொங்கொங் வந்த பின்னர் நடந்த மிகப்பெரிய வன்முறை இதுதான் என கூறப்படுகிறது. மேலும், நேற்று (ஞாயிற்றுக் கிழமை) மீண்டும் மாபெரும் பேரணி ஒன்றை நடத்த போராட்டக்காரர்கள் முடிவு செய்தனர்.

இது ஹொங்கொங் தலைமை நிர்வாகி கேரி லாமுக்கு தலைவலியாக அமைந்தது. சீன கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்கள் இடையே இந்த விவகாரம் பெருத்த சலசலப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து வெள்ளி இரவு கேரி லாம், தனது ஆலோசகர்களின் அவசர கூட்டம் ஒன்றை நடத்தினார். அதில் மக்கள் போராட்டத்தால் நிலைமை கைமீறிப் போய்க் கொண்டிருப்பதால் அடுத்து என்ன செய்வது என்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

இந்த நிலையில் சனியன்று அவர் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது அவர் சர்ச்சைக்குரிய சட்ட திருத்த பிரேரணையை நிறுத்தி வைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மக்கள் போராட்டத்துக்கு நிர்வாகம் அடிபணிந்து விட்டதையே இது காட்டுகிறது.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-




சட்ட திருத்தப் பிரேரணையை நிறைவேற்றும் நடவடிக்கையை அரசு நிறுத்தி வைக்க முடிவு செய்துள்ளது. இது தொடர்பான பணிகளை சட்டசபை நிறுத்தி வைக்கும். சமூகத்தின் அனைத்து தரப்பினருடனான எங்கள் தகவல் தொடர்புகளை மீண்டும் தொடங்குவோம். சமூகத்தின் பல தரப்பட்ட கருத்துகளையும் கேட்க முடிவு செய்துள்ளோம்.

எங்கள் நடவடிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் மற்றும் வேறு பல காரணிகள் தான் சமூகத்தில் சர்ச்சைகளை, பிரச்சினைகளை தூண்டி விட்டன. இதற்காக நான் மிகுந்த வேதனையையும், வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். - இவ்வாறு அவர் கூறினார்.

அதே நேரத்தில் பிரேரணையை முழுமையாகத் திரும்பப்பெற வேண்டும் என்று போராட்டக்காரர்கள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikathir





**அமரர் க.மு.தர்மராஜாவின் நினைவஞ்சலிக் கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது. அந்த நினைவுப் பகிர்வு நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் உரையாற்றினார் அந்த உரை இங்கு பிரசுரமாகியுள்ளது.**



# கொள்கைப்பற்றுள்ள தமிழ் கட்சிகள் ஓரணியில் சேர்ந்து செயற்படுவதே சிறப்பு

## நான் கூறுவதை ஏற்குமாறு சஜனை வற்புறுத்தி இருப்பார் தர்மராஜா!

அமரர் தர்மராஜாவுடன் அன்று பக்கம் பக்கமாக அமர்ந்திருந்த இதே மண்டபத்தில் அன்னாரின் நினைவுப் பகிர்வுக்காக அவர் இல்லாமல் தனித்து நின்று இன்று பேசுவது மனதிற்கு பாரமாக இருக்கின்றது. பிரபல்யமான சட்டத்தரணிகளுடன் இருந்து வேலை செய்து தானும் யதார்த்த சட்டவல்லுநராக மாறியவர் அமரர் தர்மராஜா அவர்கள். என் பேச்சுக்கள், என் நீதிமன்ற தீர்ப்புக்கள் போன்றவற்றில் என்னிலும் பார்க்கப் பாண்டித்தியம் பெற்றிருந்தவர் அவர். எங்கே, எப்போது, என்ன பேசினேன், எந்தச் சட்டக் கருத்தை எவ்வாறு, எங்கு, எந்தத் தீர்ப்பின் மூலம் வெளியிட்டேன் என்றெல்லாம் தெரிந்து வைத்திருந்தார் அவர். நான் மறந்தவற்றை எல்லாம் அவர் நினைவில் வைத்திருந்தார்.

ஔவையாரிடம் முருகன் கேட்கிறான் ஔவையே! உலகத்தில் பெரியது எது? என்று. அவரின் பதில் நீண்டதாக இருந்தாலும் சுருக்கமான பதில் பிற்காலத்தில் வெளியிட்டார்கள். அதை மட்டும் கூறுகின்றேன்–

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்

(அரவு என்று கூறியது ஆதிசேஷனை. அதாவது இந்த விசாலமான உலகம் பெரிதாக இருப்பினும் அதைத் தாங்கு கின்றவர் ஆதிசேஷன் என்ற பாம்பு என்று ஐதீகம். உல கத்தைத் தலைமேல் தாங்குவதால் ஆதிசேஷன் உலகத்திலும் பெரியது என்கின்றார் ஔவையார்)

பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ அரவினைக்கொரு தலைப் பாரம்
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்
உமையோ இறைவர்தம் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டர்தம் உள்ளத் தொடுக்கம்
தொண்டர் தம் பெருமை சொல்லவும் பெரிதே

என்று முடிக்கின்றார் ஔவையார்.

ஆகவே உலகம் பெரிது அதனிலும் பெரிது ஆதிசேன் என்ற பாம்பு. அதே பாம்பு அம்மனின் கையிலே சிறுவிரல் மோதிரமாக இருக்கின்றது. ஆகவே அம்மனே பெரியவள். ஆனால் அம்பாள் ஐயனின் உடலில் பாதி. அர்த்தநாரீஸ்வரர் என்ற முறையில் சிவனின் பாதி சக்தி. ஆகவே சிவனே பெரியவர் என்று முடித்திருக்க வேண்டும் ஔவையார். அவர் அப்படி செய்யவில்லை. இறைவனோ அவர் தொண்டர்களின் மனதில் உறைந்திருக்கின்றார். ஆகவே சிவன் தனது தொண்டர்களின் மனதில் அடங்கி விடுகின்றான் என்கின்றார். இராவணன் தன் தசைநார்களை வைத்து வீணையை மீட்டிய போது இறைவன் இராவணனுக்கு மனம் உவந்து அவன் கேட்கும் வரங்கள் எல்லாவற்றையும் அள்ளிக் கொடுக்கின்றான். தொண்டர்களின் அன்பு, திடம், வைராக்கியம் யாவும் இறைவனை அடிபணிய வைக்கின்றன. தொண்டர்கள்தான் பெரியவர்கள் அவர்களிலும் பார்க்க எதுவுமே பெரிதில்லை என்று ஔவையார் கூறும் போது நாங்கள் தொண்டர்களின் பலத்தை முற்றாக அறிகின்றோம்.

இவ்வாறான ஒரு தொண்டரே அமரர் தர்மராஜா என்று கூறவருகின்றேன். அவர் மருதநாரின் தொண்டர், ஜீ.ஜீயின் தொண்டர், எஸ்.ஆர்.கனகநாயகத்தின் தொண்டர், N.T. சிவஞானத்தின் தொண்டர், நண்பர் குமார் பொன்னம்பலத்தின் தொண்டர். தொண்டர் என்ற விதத்தில் அவர் மருதநாரை, ஜீ.ஜீயை, எஸ். ஆரை, என்.ரி சிவஞானத்தை, குமாரை விஞ்சிய ஒருவராக வாழ்ந்தார். ஏன் கனகீஸ்வரனை யும் விஞ்சியவராக வாழ்ந்தார்! அவர்கள் ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் ஆழமாக நுழைந்து அவர்கள் செய்த ஒவ்வொரு காரியமும் சரியே என்று அடித்துக் கூறக் கூடிய ஒருவராக வாழ்ந்தார்.

கடைசிக் காலங்களில் இவ்வாறான மகானுபாவர்களுடன் என்னையும் சேர்த்துக் கொண்டது தான் விந்தையிலும் விந்தை. நான் செய்தவற்றை, சிந்தித்தவற்றை சரியே என்று அடித்துக் கூறும் திறன் படைத்திருந்தவர் தர்மராஜா. நான் கூட என் நிலை பற்றிய சரி பிழையில் சிந்தனை செலுத்திய போது இல்லை, நீங்கள் எடுத்த முடிவே சரி! என்று ஆணித்தரமாக கூறியவர் நண்பர் தர்மராஜா அவர்கள்.

நல்ல வேளை எனக்கும் கஜேந்திரகுமா ருக்கும் இடையில் முரண்பாடு வந்திருக்கும் இந்த நேரத்தில் அவர் இல்லாதது தம்பி கஜனுக்கு ஆறுதல் தான். கட்டாயம்நான் கூறுவதை ஏற்குமாறு கஜனை வற்புறுத்தி இருப்பார். தர்மராஜா அவர்கள்! காரணம் இன்றைய நிலை அப்படி என்பதை நண்பர் தர்மராஜா நன்றாக அறிந்திருந்தவர். வட கிழக்கைதுண்டாட, படையினரை நிரந்தரமாக வட கிழக்கில் வைத்திருக்க, தமிழ் பேசும் மக்களை பயங்கரவாதிகள் என்று சித்திரிக்கத் தொடர்ந்து வந்த மத்திய அரசாங்கங் கள் யாவுமே நடவடிக்கைகள் எடுத்து வந்துள்ளமையை அவர் அறிந்திருந்தார்.

கடந்த 30 வருடகால யுத்தத்தில் இழந்தவற்றை விடவும் வடகிழக்கில் எமது இருப்புக்கான அடிப்படைகளை வேகமாக நாங்கள் இன்று இழந்து கொண்டிருக்கின்றோம் என்பதை அவர் உணர்ந்திருந்தார். எமது அரசியல், சமூக, பொருளாதார அபிலாஷைகளுக்கான அடித்தளங்கள் திட்டமிட்ட வகையில் சிதைக்கப்பட்டு வருகின்றமையை நன்கறிந்திருந்தார். காணிகள் பற்றிய சட்ட அறிவைக் கொண்டிருந்த அவர் நிலம் போனால் எமது அடிப்படைநிலையே போய்விடும் என்பதைப் பலதடவைகள் கூறியும் வந்துள்ளார். நிலைமை கட்டுமீறிச் சென்றுகொண்டிருக்கின்றது என்பதை தமது அந்திமகாலத்தில் கூறி அங்கலாய்த்துக் கொண்டிருந்தவர் நண்பர் தர்மராஜா அவர்கள்.

பலமுள்ள கொள்கைப் பற்றுள்ள தமிழ்த் தலைவர்கள் சேர வேண்டியதன் அவசியத்தை அவர் அறிந்திருந்த காரணத்தால் எனக்கு சார்பாக தம்பி கஜனிடம் சிபார்சு செய்திருப்பார் என்று கூறுகின்றேன். கொள்கைப் பற்றுள்ள தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் சேர்ந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை நண்பர் தர்மராஜா அறிந்திருந்தமையால் கஜனிடமும், கஜனின் தாயாரிடமும், அவர் கட்சி அங்கத்தவர்களி டமும் பேசி நிலைமையை புரிய வைக்கக் கூடிய ஒருவராகவே அவர் இருந்தார். கீரியும் பாம்புமாக இருந்த தமிழ்த் தலைவர்கள் முன்னர் தமிழ் மக்கள் நலம் கருதி ஒன்று சேர்ந்ததை அவர் மறந்திருக்கவில்லை. அவரின் மறைவு என்னைப் பலம் இழக்கச் செய்து விட்டது என்று கூறலாம்.

தர்மராஜா அவர்கள் மனதில் விஸ்வாசம் என்பது 100க்கு 100 இருப்பவனே உண்மையான மனிதன் என்ற ஒரு கருத்து ஆழமாக வேரூன்றி யிருந்தது. தமிழர்களின் மிகப் பெரிய குற்றம் என்ன தெரியுமா? என்று கேட்பார். அதுநன்றி மறந்ததே! என்பார். எமக்கு உதவியவர்களின் நன்றி மறந்து நாம் வாழ்ந்து வருவதாலேயே நாங்கள் இன்று இந்த கேவலமான நிலையை அடைந்துள்ளோம் என்பார்.

எந் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந் நன்றி கொன்ற மகற்கு

என்ற குறளை எடுத்துக் காட்டாகக் கூறி செய்நன்றி கொன்ற தமிழ் மக்களுக்கு உய்வேயில்லை என்பார். அவர்களுக்கு உய்வில்லை என்பதால்தான் SJV தமிழர்களைத் தெய்வந் தான் காப்பாற்ற வேண்டும் என்று கூறினார் என்று எடுத்துக் காட்டுவார்.

### தம்பியிடம் நிலைமையை விளக்கி சிபார்சும் செய்திருப்பார் அவர்!!

எமக்கென வாழ்ந்த பல தலைவர்களை, அரசியல்வாதிகளைத் தமிழ் மக்கள் நிராகரித்தமை, மறந்தமை, உதாசீனம் செய்தமை மிகக் கொடிய பாவம் என்று கூறுவார். அவர் வாழ்க்கையில் நன்றி, விஸ்வாசம் என்பன மிக முக்கியமானவையாக இருந்தன. யாராவது அவருக்கு உதவினால் அதற்கு மேலாக அவர் பிரதி உபகாரம் செய்வார்.

அவரின் மற்றொரு குணாதிசயத்துக்கு வருகின்றேன். எல்லாம் சக்தி மயம் என்பதே அது. ஆரம்ப காலங்களில் நாஸ்திகப் போக்குடையவராகவே தொடங்கிய அவர் பின்னைய காலங்களில் உலகில் நடப்பவை யாவும் ஒரு சக்தியின் செயற்பாடுகளே என்ற முடிவுக்கு வந்தார். அதனை முற்றிலும் நம்பினார். எங்கும் எல்லோருக்கும் தனது கருத்தை சொல்லிக் காட்டவுந் தவறவில்லை. நான் சமய அறிவால் அறிந்து கொண்டதை அவர் அனுபவத்தால் அறிந்து கொண்டார். எப்பவோ முடிந்த காரியம் என்று யோகசுவாமி கூறியதைத் தர்க்க ரீதியாக நான் ஏற்றுக் கொண்டிருந்தேன். அவரோ வாழ்க்கையைப் பார்த்து, மக்களின் வாழ்வுகளைப் பார்த்து, நடப்பவற்றைக் கூர்ந்து அவதானித்து அந்த முடிவுக்கு வந்திருந்தார். எல்லாம் ஒரு சக்தியின் செயற்பாடே என்பதில் அவர் அசையாத நம்பிக்கை வைத்திருந்தார். சில நேரங்களில் எனது இந்து சமயம் பற்றிய பேச்சுக்களையே மேற்கோளாக எடுத்துக் காட்டி எல்லாம் சக்தியின் வெளிப்பாடுகளே என்று எனக்குக் கூறுவார்!



நான் சாவகச்சேரிக்கு மாவட்ட நீதிபதியாக சென்ற காலத்திலேயே தர்மராஜா என்றொருவர் இருந்ததை அறிந்திருந்தேன். பிரக்கிராசியாரின் லிகிதர் என்ற முறையில் ஒரு வழக்கின் ஆவணங்கள் அனைத்தையும் தயார்படுத்தக் கூடியவர் அவர் என்று சொல்லப்பட்டது. ஆனால் அவரை நான் அப்போது சந்திக்க வாய்ப்பிருந்ததில்லை. ஆனால் அவரோ என்னை நிழல் போல தொடர்ந்து எனது ஒவ்வொரு அசைவையும் உள்வாங்கி இருந்தார். சட்டத்தரணிகள் என்னைப் பற்றிக் கூறியதை எல்லாம் அவர் தெரிந்து வைத்திருந்தார்.

தம்புசெட்டியைச் சேர்ந்த அட்வகேட் சோமசுந்தரம் என்பவர் எனது மிக நெருங்கிய நண்பர். சட்டத்தாலும், சரித்திரத்தாலும், அரசியலாலும், சமூகவியலாலும், தர்க்கத்தாலும், சமயக் கருத்துக்களாலும், கிரிக்கெட் போன்ற விளையாட்டுக்களாலும் நாமிருவரும் அறிவு ரீதியாகவும் ஆர்வ ரீதியாகவும் பிணைந்திருந்தோம். என்னை நீதித் துறைக்குள் கொண்டு வந்ததில் அவருக்குப் பெரும் பங்கு இருந்தது. நான் நீதித்துறைக்குள் உள்நுழைய முடியாதென்றேன். என் தொழிலில் நல்ல வருமானம் வருகின்றது என்றேன். சோமா கேட்கவில்லை.

ஒரு நாள் நீதித்துறைக்குள் செல்ல அனுப்ப வேண்டிய விண்ணப்பப்படிவம் ஒன்றை என்னிடம் நீட்டி அதற்குக் கையெழுத்திடு என்றார். நான் முடியாது என்றேன். நீ கையெழுத்து வைக்காவிட்டால் நான் உன் கையெழுத்தை வைத்து அனுப்புவேன் என்றார். நீ உன் நண்பனைக் காட்டிக் கொடுக்க மாட்டாய் என்றும் கூறினார். நான் கையெழுத்திட்டேன்.

கடைசியில் நீதிபதியாகி சாவகச்சேரி வந்து சேர்ந்தேன். என் முன் சோமசுந்தரம் அவர்கள் ஒரு விவாகரத்து வழக்கில் ஆஜரானார். அவர் எவ்வளவு சமர்ப்பணங்கள் செய்தும் நான் அவரின் கட்சிக்காரருக்கு எதிராகவே தீர்ப்பளித்தேன். உடனே அவர் மற்றைய சட்டத்தரணிகளுக்குக் கூறினாராம் சேசே! நான் தவறு செய்து விட்டேன். Frankenstein ஒன்றை உண்டாக்கி விட்டேனே! என்று கூறினாராம்.

இதை எப்படியோ அறிந்து கொண்டு தர்மராஜா இந்தக் கதையை எனக்குக் கூறுவார். நீங்கள் பக்கச் சார்பில்லாமல் நடந்து கொண்டதால்தான் அவ்வாறு சோமா அவர்கள் கூறினார்கள் என்று தனது வியாக்கியானத்தையுந் தந்தார்.

கஜேந்திரகுமார் மீது அவருக்கு அலாதியான பாசமும் மரியாதையும் இருந்தது. இந்தப் பிள்ளை நல்லதொரு சட்டவல் லுநர் வாழ்க்கையைத் தியாகம் செய்துவிட்டு அரசியலில் ஈடுபட்டுள்ளது. அவருக்கு என்னதான் இல்லை? ஏன்தான் கட்சி அரசியலுக்குள் சென்று சீரழிகின்றாரோ தெரியவில்லை என்று கூறுவார். கஜேந்திரகுமார் தனது தந்தை போல் பாட்டனார் போல சட்டத்துறையில் சிறந்து விளங்க வேண்டும் என்று எதிர்பார்த்தார். ஆனால் கஜனின் அரசியல் பிடிவாதம் அவருக்கு ஆத்திரத்தை ஊட்டவில்லை. பாசத்தையே கூட்டியது. தொடர்ந்து கஜேந்திரகுமார் அரசியலில் நன்றாகச் செய்ய வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தார். நாங்களும் கஜேந்திரகுமார் அரசியலில் நல்ல இடத்தைப் பெற வேண்டும் என்றே விரும்புகின்றோம். நாங்கள் சேர்ந்தால் எம்மால் சாதிக்க முடியாதது ஒன்றில்லை என்பது எமது கருத்து.

திரு.தர்மராஜா அவர்களின் வாழ்க்கையை உற்று நோக்குவோமானால் அவர் ஒரு யதார்த்தவாதி என்பது தெரியவரும். தீவிர உணர்ச்சி மிக்கவர். எல்லோரும் நன்றி மறக்காது வாழ வேண்டும் என்று நினைத்தவர். அவரின் மறைவு அவரோடு தொடர்பில் இருந்த சகலருக்கும் ஒரு பேரிழப்பே!

தேசவழமைக் கருத்துகள் பற்றி என்னிடம் கேள்விகள் கேட்டு தொடங்கிய அவரின் நட்பு எனது நீதித்துறை ஓய்வின் பின்னர் வெகுவாக வளர்ந்து அவரின் அந்திம காலம் வரையில் நீடித்திருந்தது. அவரின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன். நாம் போமளவும் இட்டு உண்டு இருப்போமாக!

# ஜனாதிபதித் தேர்தல்தான் முதலில் நடக்கவேண்டும்!

## அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து



கொழும்பு, ஜூன் 17

தற்போதைய ஜனாதிபதியின் பதவிக்காலம் நிறைவடைகின்றது. எனவே, இவ்வருட இறுதி மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல்தான் நடத்தப்பட வேண்டும்.

– இவ்வாறு வலியுறுத்தினார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

நாடாளுமன்றத் தேர்தல் இப்போதைக்கு அவசியமில்லை. ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியினர் எந்தத் தேர்தலையும் சந்திக்கத் தயாராகவுள்ளனர். வேட்பாளர்களும் தயார் நிலையில் உள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

# கற்சிலைமடுவில் லொறி விபத்தில் இருவர் காயம்



முல்லைத்தீவு, ஜூன் 17

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடுப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் காயமடைந்துள்ளனர்.

புதுக்குடியிருப்பிலிருந்து ஒட்டுசுட்டான் நோக்கி எரு ஏற்றிக் கொண்டு பயணித்துக்கொண்டிருந்த லொறி கட்டுப்பாட்டை இழந்து அருகிலுள்ள காணிக்குள் தடம் புரண்டது.

நேற்றுக் காலை 9.15 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்தில் லொறியில் பயணம் செய்த சாரதி, நடத்துநர் ஆகிய இருவரும் சிறிய காயங்களுக்கு உள்ளாகி ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற ஒட்டுசுட்டான் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ஐ)

# புதிய அரசை ஆட்சிக்கு கொண்டு வந்தவர்கள் இப்போது அது ஏமாற்றிவிட்டது என்கிறார்கள்

## கூறுகின்றார் டக்ளஸ் தேவானந்தா எம்.பி.

யாழ்ப்பாணம், ஜூன் 17

புதிய அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்ததாகக் கூறுபவர்கள் தற்போது தேர்தல் வரும்போது அரசு ஏமாற்றிவிட்டது எனக் கூற முற்பட்டிருக்கின்றனர் என ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அச்சுவேலி மூளாய் பகுதிக்கான சிற்றூர்திச் சேவையைஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.




அவர் மேலும் தெரிவிக்கையில் –

கடந்த காலங்களில் மக்கள் தலைவர்களைத் தெரிவு செய்து எவ்வாறான ஏமாற்றங்களைப் பெற்றுக் கொண்டனர் என்பதை உணர்ந்து எதிர்வரும் தேர்தலில் சரியான தலைவர்களைத் தெரிவு செய்யவேண்டும். நான் ஒருபோதும் அரசு ஏமாற்றிவிட்டது என கூறப்போவதில்லை. எனக்கு மக்கள் ஆணை கிடைத்தால் நான் மக்களின் கோரிக்கைகள் மற்றும் தேவைகளைத் தீர்த்து வைப்பேன்.

இப்பகுதி மக்களுக்கு ஒரு சிறந்த சேவையை வழங்கும் நோக்கில் 30 வருடங்களின் பின்னர் அச்சுவேலி, மூளாய்க்கு இடையிலான சிற்றூர்திச் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது – என்றார்.

சிற்றூர்தியின் நாடாவை வெட்டி டக்ளஸ் தேவானந்தா சேவையை ஆரம்பித்து வைத்தார். (ஐ)

# அலங்கரிக்கப்படும் வவுனியா நகரப்பகுதி



வவுனியா, ஜூன் 17

பொசன் போயா தினத்தினை முன்னிட்டு வவுனியா மணிக்கூட்டு சந்தியடியிலிருந்து ஏ – 9 வீதியில் அமைந்துள்ள வன்னி இராணுவ முகாம் வரையிலான பகுதி பௌத்த கொடியினால் அலங்கரிக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டனர்.

குறிப்பாக ஏ – 9 வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ போதிதக்சிணாராமய பௌத்த விகாரையினுள் கொட்டகைகள் அமைக்கப்பட்டு மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதுடன் விகாரைக்கு முன்பாக வெசாக் தோரணங்கள் அமைக்கும் பணியிலும் இராணுவத்தினர் ஈடுபட்டிருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. (ஐ)

# கொழும்பில் யோகாசன நிகழ்வு



சர்வதேச யோகா தினத்தையொட்டி கொழும்பிலுள்ள இந்திய தூதரகம் யோகாசன நிகழ்வொன்றை நேற்றுமுன்தினம் காலை சுதந்திர சதுக்கத்தில் ஏற்பாடு செய்திருந்தது.

அரசியல்வாதிகள், பொதுமக்கள் என ஏராளமானோர் இதில் கலந்து கொண்டனர். (ஐ)

# வவுனியாவில் வறட்சியால் வற்றிப் போகும் குளங்கள்

வவுனியா, ஜூன் 17

வவுனியாவில் தொடரும் வறட்சியான காலநிலை காரணமாக குளங்களின் நீர் மட்டம் குறைவடைந்து வருவதுடன் மீன்களும் இறந்து வருகின்றன.

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலை காரணமாக வவுனியாவிலும் வறட்சியான காலநிலை நீடிக்கின்றது. இவ் வறட்சி நிலை காரணமாக குளங்களின் நீர்மட்டமானது சடுதியாக குறைவடைந்து வருவதுடன் மீன்களும் இறந்து வருகின்றன.

குறிப்பாக, புதுக்குளம், மூனாமடுக் குளத்தில் இருந்து சிறுபோக நெற்செய்கைக்காகஅதிகளவிலானநீர்பெறப்பட்டமையாலும், வெப்பமான வறட்சிக் காலநிலையாலும் நீர்வற்றியுள்ளது. இதனால் அப் பகுதிக் குளத்தில் பெருந்தொகையான மீன்கள் இறந்து வருகின்றன. அத்துடன், கால்நடைகளும் நீர் இன்றி பெரும் அவதிக்குள்ளாகியுள்ளன. (ஐ)

# கோபா அமெரிக்கா உதைபந்துத் தொடரில் கொலம்பியாவிடம் வீழ்ந்தது ஆர்ஜென்ரீனா



கோபா அமெரிக்கா உதைபந்து கிண்ணத் தொடரின் குழு நிலைப்போட்டியில் கொலம்பியாவிடம் ஆர்ஜென்ரீனா அணி தோல்வியடைந்துள்ளது.

பிரேசிலில் நடைபெற்று வரும் கோபா அமெரிக்க கிண்ணத்திற்காக பி குழுவுக்காக போட்டி ஒன்று இலங்கை நேரப்படி நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

இந்த போட்டியில் பலம் பொருந்திய அணிகளான கொலம்பியா மற்றும் ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின.

ஆர்ஜென்ரீனா அணியில், ஐந்து முறை பல லொன் டொர் விருதை வென்ற மெஸ்ஸியுடன் செர்ஜியோ அகுவேரோ மற்றும் ஏன்ஜல் டி மாரியா ஆகியோர் இணைந்தோடு கொலம்பியாவில் ஜேம்ஸ் ரொட்ரிகஸ், ரடமர் பல்கோ மற்றும் ஜுவான் குவாட்ரடோ ஆகியோர் விளையாடினர்.

போட்டியின் ஆரம்பம் வேகமாக இருந்தபோதும் கொலம்பிய அணி அதிகம் ஆதிக்கம் செலுத்தியது. மெஸ்ஸியின் முயற்சிகளை தடுப்பதில் அந்த அணி அதிக அவதானம் செலுத்தியது. எனினும் முதல் பாதி கோலின்றி முடிவுற்றது.

இந்தப் போட்டியின் கடைசி நிமிடங்கள் வரை இரு அணிகளும் கோல்பெற போராடிய நிலையில் கொலம்பியாவின் ரொஜர் மார்டினஸ் 72ஆவது நிமிடத்தில் அபார கோல் ஒன்றை போட்டார்.

இதனைத் தொடர்ந்து 15 நிமிடங்கள் கழித்து மாற்று வீரரான டுவான் சபாடா மற்றொரு கோலை போட்டு கொலம்பிய அணியின் வெற்றியை உறுதி செய்தார்.

இதன் காரணமாக அந்த அணி இரண்டுக்கு பூச்சியம் என்ற கணக்கில் ஆர்ஜென்ரீனா அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

## சரியான திட்டத்துடன் விளையாடவில்லை!



ஆஸ்திரேலிய அணிக்கெதிரான தோல்வி குறித்து இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன கவலை வெளியிட்டுள்ளார்.

உலக கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆஸ்திரேலிய அணியை எதிர் கொண்ட இலங்கை அணி படுதோல்வியடைந்தது.

இந்தத் தோல்வி குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன கவலை வெளியிட்டுள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'மிகவும் நெருக்கமான ஆட்டத்தில் தோல்வியை சந்திக்க நேர்ந்தது ஏமாற்றம் அளிக்கிறது. நாங்கள் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று எதிரணிக்கு முதலில் துடுப்பெடுத்தாடச் சந்தர்ப்பம் அளித்தோம். எனினும், ஆரோன் பிஞ்ச் மற்றும் ஸ்டீவ் ஸ்மித் ஆகியோர் எமது பந்துவீச்சை சிறந்த முறையில் எதிர்கொண்டு ஓட்டங்களைக் குவித்தனர்.

அதேபோல, பதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய நாங்களும் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொண்டோம். இலக்கை எட்ட முடியும் என்று தான் நினைத்தோம்.

ஆனால், மத்திய வரிசை வீரர்களின் பொறுப்பற்ற ஆட்டம் காரணமாகவும், முக்கியமான தருணங்களில் விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் தோல்வியைச் சந்திக்க நேரிட்டது.

இந்தப் போட்டியில் ஆஸ்திரேலிய பந்துவீச்சாளர்கள் நிறைய அழுத்தங்களைக் கொடுத்து எமது இலக்கை அடைவதற்கு தடையாக இருந்தனர்.

உண்மையில் ஸ்டார்க் மற்றும் பெட் கம்மின்ஸ் ஆகிய இருவரும் உலகத் தரம் வாய்ந்த வீரர்கள் ஆவர். அவர்கள் என்ன செய்வார்கள் என்பதை நாங்கள் அறிந்து வைத்திருந்தோம்.

நாங்கள் ஒரு திட்டத்தை வைத்திருக்க வேண்டும், ஆனால் அதை நாங்கள் இந்தப் போட்டியில் செய்யவில்லை. மழையால் நாங்கள் இரண்டு ஆட்டங்களை இழந்தோம்.

எஞ்சிய போட்டிகளில் குறைந்தது இரண்டு போட்டிகளில் நாங்கள் வெல்ல வேண்டும். நாங்கள் நன்றாக விளையாட இங்கு வந்தோம், அதை நாங்கள் விளையாட விரும்புகிறோம்' எனத் தெரிவித்துள்ளார். (ஐ)

## தென்னாபிரிக்காவுக்கு கிட்டிய முதல் வெற்றி



உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் 21ஆவது லீக் போட்டியில், ஆப்கானிஸ்தான் அணியை தென்னாபிரிக்க அணி டக்வெத் லூயிஸ் முறையில் 9 விக்கெட்டுகளால் வீழ்த்தியுள்ளது.

இந்த போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணியின் தலைவர் பாப்டு பிளேசிஸ் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தார்.

இதற்கமைய துடுப்பெடுத்தாட களமிறங்கிய ஆப்கானிஸ்தான் அணிக்கு சிறந்த தொடக்கம் கிடைக்கவில்லை. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய ஹஷ்ரத்துல்லா சஷாய் 22 ஓட்டங்களை மட்டுமே பெற, புதிய துடுப்பாட்ட வீராக வந்த றஹ்மத் சாஹ் 6 ஓட்டங்களை மட்டுமே பெற்று வெளியேறினார்.

தொடர்ந்து போட்டியில் மழையின் குறுக்கீடு ஏற்பட்டதால் அணிக்கு 48 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்டது. மழையினை அடுத்து தொடர்ந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறியது.

இறுதியாக 34.1 ஓவர்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் பறிகொடுத்த ஆப்கானிஸ்தான் அணி 125 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

ரஷீட் கான் 25 பந்துகளில் 6 பௌண்டரிகள் அடங்கலாக 35 ஓட்டங்கள் பெற்று அதிகபட்ச தனிநபர் ஓட்ட எண்ணிக்கையினை பதிவு செய்தார்.

பந்துவீச்சில் இம்ரான் தாஹிர் 29 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தோடு, கிறிஸ் மொரிஸ் 3 விக்கெட்டுகளையும், அன்டைல் பெஹ்லுக்வேக்வேயோ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

இதனை அடுத்து டக்வெத் லூயிஸ் முறையில் போட்டியின் வெற்றி இலக்காக நிர்ணயம் செய்யப்பட்ட 127 ஓட்டங்களை என்ற வெற்றி இலக்குடன் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான குயின்டன் டி கொக் மற்றும் ஹஷிம் அம்லா ஆகியோர் சிறந்த முதல் விக்கெட் இணைப்பாட்டம் (104) ஒன்றை வழங்கினர்.

இந்த இணைப்பாட்டம் காரணமாக தென்னாபிரிக்க அணி ஒரு விக்கெட்டினை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கினை அடைந்து 9 விக்கட்டுக்களினால் வெற்றி பெற்றுள்ளது.


## மேற்கிந்தியத் தீவுகள் அணி அரையிறுதியை எட்டும்போது கிரிக்கெட் போர் ஆரம்பமாகும்

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், மேற்கிந்திய தீவுகள் அணி அரையிறுதியை எட்டும்போது கிரிக்கெட் யுத்தம் ஆரம்பமாகும் என அணியின் முன்னாள் வேகப் பந்து வீச்சாளர் ஜோயல் கார்னர் தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண வரலாற்றில் முதல் உலகக்கிண்ணத்தையும், அணியின் முதல் கிண்ணத்தையும் 1975ஆம் ஆண்டு ஏந்திய மேற்கிந்திய தீவுகள் அணி, இரண்டாவது அத்தியாயமான 1979ஆம் ஆண்டுக்கான உலகக்கிண்ணதையும் ஏந்தியது.

ஆனால் அதன்பிறகு மேற்கிந்திய தீவுகள் அணி, 1983ஆம் ஆண்டு இந்தியாவிடம் சம்பியன் கிண்ணத்தை பறிகொடுத்தது.

இதன்பிறகு மேற்கிந்திய தீவுகள் அணியால், உலகக்கிண்ண தொடரில் சாதிக்கவே முடியவில்லை. தற்போது 12ஆவது உலகக்கிண்ண தொடரில் 40 ஆண்டுகளுக்கு பிறகு சம்பியன் கிண்ணத்தை வெல்லும் முனைப்பில் மேற்கிந்திய தீவுகள் அணி களமிறங்கியுள்ளது.



இந்த நிலையில் இம்முறை உலகக் கிண்ணத்தை மேற்கிந்திய தீவுகள் அணி, கையில் ஏந்தினால் மிகுந்த மகிழ்ச்சியடைவேன் என அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஜோயல் கார்னர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில்–

நாங்கள் எதிர்பார்த்தது தொடர்ந்து சிறப்பான திறமையை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான். அந்த வகையில் நாங்கள் விளையாடுவதை வைத்து பார்க்கும் போது, இறுதிப் போட்டிக்கு முன்னேறுவோம்.

இறுதிப் போட்டிக்கு முன்னேறி விட்டால், அதன்பின் கிண்ணத்தை கைப்பற்றுவதை யாராலும் தடுக்க முடியாது. நான் மேற்கிந்திய தீவுகள் அணியை சேர்ந்தவன் என்பதால், நாங்கள் வெற்றி பெற வேண்டும் என்று விரும்புகிறேன். அரையிறுதி போட்டி வாய்ப்பை பெறும்போது, உண்மையான கிரிக்கெட் யுத்தம் ஆரம்பமாகும்.

அணித் தலைவர் ஜேசன் ஹோல்டர் கடுமையாக உழைக்கிறார். மேலும் சிறந்த அணித்தலைவராக மாறிக் கொண்டிருக்கிறார். அவர் உலகக் கிண்ணத்தை கையில் ஏந்தினால் நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன். ஏனெனில் நாங்கள் உலகக் கிண்ணத்தை வென்று பல வருடங்கள் ஆகிவிட்டன என கூறினார்.

1979ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகள் அணி உலகக்கிண்ணத்தை வெல்வதற்கு ஜோயல் கார்னர் மிக முக்கிய காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இன்றைய ஆட்டம்




பங்களாதேஷ் – மேற்கிந்தியத் தீவுகள்
(பிற்பகல் 3 மணி)

## குற்றவாளிகளைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா ஓமந்தை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வசந்த மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வின் பின்னர், செய்தியாளர்கள் மத்தியில் பேசும்போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது இலங்கையில் இருக்கின்ற அரசியல் நிலைமை, பயங்கரவாத தாக்குதல், அதன் விளைவு தொடர்பாக மக்கள் நேரடியாகப் பல பாதிப்புகளைச் சந்திக்காவிட்டாலும் மறைமுகமாகப் பல பாதிப்புகளைச் சந்தித்திருக்கின்றார்கள்.

பயங்கரவாதத் தாக்குதலின் பிற்பாடு அரசிலுள்ள பங்காளிக் கட்சிகள் பலரின் கருத்து அந்தத் தாக்குதலை மையப்படுத்தியதாகவே இன்றுவரை இருக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படிப்பட்ட உதவிகளைச் செய்ய வேண்டும் என்பதில் தற்போது ஒரு ஸ்திரமற்ற தன்மையிலேயே அரசு இருக்கின்றது. குறிப்பாக வன்னிப் பிரதேசத்தில் கடும் வறட்சியால் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு அவசரமாக வழங்கக்கூடிய உதவிகள் குறித்து அரசினால் கவனம் செலுத்தப்படவில்லை என்பது தான் என் கருத்தாகும்.

முஸ்லிம் அமைச்சர்கள் இராஜினாமா செய்திருந்தார்கள். குறிப்பிட்ட மூன்று நபர்கள் மீதான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. அப்படியான சூழ்நிலையில் தனிப்பட்ட ரீதியில் செய்யவேண்டிய விடயத்தை ஒரு சமூகம் சார்ந்து அவர்கள் செய்திருப்பது அவர்களது ஒற்றுமையை வெளிப்படுத்தினாலும் பயங்கரவாதிகள் அல்லது நேரடியாகக் குற்றம் சாட்டப்பட்ட அரசியல்வாதிகள் தப்பித்துக் கொள்வதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைகின்றது.

குறிப்பாக முஸ்லிம் அரசியல்வாதிகளான இரண்டு ஆளுநர்கள் மீது மிகப்பெரிய குற்றச்சாட்டுக்கள் இருந்தபோதும், சகல அமைச்சர்களும் ஒன்றாக ராஜினாமா செய்த பின்னர் அவர்கள் குறிப்பிட்ட நபர்களை காப்பாற்றுவதற்காக ஒற்றுமையாக எடுத்த இந்தத் தீர்மானம். ஒன்று பயங்கரவாதத்துக்கு அவர்கள் ஆதரவு தெரிவிக்கிறார்கள், அல்லது ஒரு சிலரைத் தண்டிப்பதை அவர்கள் விரும்பவில்லை. அப்படி ஒன்றாக ராஜினாமா செய்த பின்னர் அந்த ஒரு சிலரில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் வெற்றிகரமாக நடைபெறவில்லை. அவர்கள் ராஜினாமா செய்யாமல் மூன்று நபர்களையும் விசாரிக்க முயற்சித்திருந்தால் கூடுதலான விசாரணைகள் நடைபெற்றிருக்கும்.

தற்போது ஒரு சமூகம் சார்ந்த பிரச்சினையாக அது பார்க்கப்படும் காரணத்தினால் விசாரணைகள் எந்த அளவுக்கு நடைபெறும், அதில் எவ்வளவு உண்மைத் தன்மை இருக்கின்றது என்பது எனக்குச் சந்தேகம் தான்.

தற்போது இலங்கையில் ஒரு அரசு ஸ்திரமற்ற தன்மையில்தான் இருக்கின்றது. அரசின் பார்வையானது பயங்கரவாதத் தாக்குதலையும் ஜனாதிபதி தேர்தலையும் நோக்கமாக தான் இருக்கின்றது – என்றார். (ஐ)

## அமைச்சுப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸ, கபீர் காசிம் எம்.பியிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள சஜித், கபீர் காசிம் போன்ற ஒருவரின் சேவை இப்போதைய நிலையில் தேவையென்றும் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

## மைத்திரியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னதாகத் தெரிவுக்குழுவில் சாட்சியங்களை வழங்கிய சிலர் ஜனாதிபதியின் பெயரைக் குறிப்பிட்டுக் கூறியதாலும் – தெரிவுக் குழுவின் உறுப்பினர்களைச் சந்திக்க ஜனாதிபதியும் விருப்பு வெளியிட்டுள்ள சூழ்நிலையிலும் – ஜனாதிபதியின் கருத்துக்களை கேட்டறியத் தெரிவுக் குழு உத்தேசித்துள்ளது.

தெரிவுக்குழு முன்னிலையில் ஆஜராகுமாறு ஜனாதிபதியைக் கேட்பது இப்போதுள்ள அரசியல் நிலையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் என்பதாலும் – தெரிவுக்குழுவில் ஆஜராகவேண்டிய கட்டாயம் ஜனாதிபதிக்கு இல்லை என்பதாலும் – ஜனாதிபதி இருக்கும் இடத்துக்குச் சென்று அவரின் கருத்துக்களைப் பெற யோசனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவுக்குழுவின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

தெரிவுக்குழு உறுப்பினர்களைச் சந்திக்கவேண்டுமென ஜனாதிபதி கூறியிருப்பதால் அவர் குறிப்பிடும் இடத்துக்குச் சென்று அவரிடம் கருத்துக்களைப் பெற யோசிக்கப்பட்டுள்ள அதேவேளை, இது ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

அதேசமயம் பாதுகாப்பு அதிகாரிகள் பலர் அடுத்தடுத்த வாரங்களில் தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்க அழைக்கப்படுவர். (ஐ)

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலம் கொடுத்துள்ள இந்த அரசை நாம் கவிழ்த்தே தீருவோம்.

– இவ்வாறு தெரிவித்தார் மஹிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன.

அவர் மேலும் கூறுகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசு மீது நாட்டு மக்களுக்கு நம்பிக்கையில்லை. உயிர்த்த ஞாயிறன்று இஸ்லாமிய தீவிரவாதிகள் நடத்திய கொலைவெறித் தாக்குதலின் பின்னர் இந்த அரசை நாட்டு மக்கள் முற்றாக வெறுத்துவிட்டார்கள்.

தாக்குதல்கள் தொடர்பில் முன்னெச்சரிக்கை கிடைத்தும் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்காமல் அசமந்தப்போக்கில் இருந்த இந்த அரசை எப்படி நம்புவது?

எனவே, இந்த அரசைக் கவிழ்க்கும் நடவடிக்கையில் நாம் இறங்கியுள்ளோம். எந்த வேளையிலும் இந்த அரசு கவிழும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இல்லாத இந்த அரசால் ஆட்சியைத் திறம்பட நடத்த முடியாது.

முஸ்லிம் அமைச்சர்கள் அனைவரையும் பதவி துறக்கச் செய்துவிட்டு இஸ்லாமியத் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்த சில முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்துள்ள இந்த அரசை வீட்டுக்கே அனுப்புவதே எமது நோக்கமாகும் – என்றார். (ஐ)

## கஜேந்திரகுமாரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில்லை என்பது எமது கருத்து என்று வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமுமான நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

க.மு.தர்மராஜாவின் நினைவஞ்சலிக் கூட்டம் கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றபோது சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் பங்கேற்றிருந்தார். (இதன் முழு விவரம் 8ஆம் பக்கத்தில்)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளாமல் இருப்பதே நல்லது என நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியுள்ள நிலையில், மீண்டும் பதவியேற்குமாறு பல தரப்பினரிடமிருந்து முஸ்லிம் அரசியல்வாதிகளிடம் கோரிக்கை விடுக்கப்படும் நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாங்கள் பதவி விலகும்போது அரசுக்குப் பல கோரிக்கைகளை முன்வைத்தோம். அந்தக் கோரிக்கைகள் இன்னும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக எம் மீது தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு ஒரு மாத காலத்துக்குள் தீர்வு பெற்றுத் தரவேண்டும்.

அத்துடன், குருநாகல், மினுவாங்கொடை பிரதேசங்களில் இனவாதிகளினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நீதி பெற்றுக் கொடுக்கப்படவேண்டும் என்பதுடன் நட்டஈடு பெற்றுக்கொடுக்கப்படவேண்டும் எனத் தெரிவித்திருந்தோம்.

அதேபோன்று இனவாதத் தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் எனக்கைதுசெய்யப்பட்ட 450க்கும் அதிகமானவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். ஆனால் சிறு சிறு காரணங்களுக்காக முஸ்லிம் மக்கள் கைதுசெய்யப்பட்டுப் பிணை வழங்க முடியாத வகையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தோம்.

அத்துடன் அபாயாவுக்கு எதிராக வெளியிடப்பட்டிருக்கும் சுற்றிக்கை இரத்துச்செய்யவேண்டும் என்றும் வெறுப்பூட்டும் வகையில் பேசுவதற்கு எதிராகச் சட்டம் நிலைநாட்ட வேண்டும் என்றும் தெரிவித்திருந்தோம். இவை எவையும் இன்னும் அரசால் நிறைவேற்றப்படவில்லை.

அத்துடன் அமைச்சுப் பதவிகளில் விலகிய அனைவரும் யாரையும் பாதுகாப்பதற்கோ சுயலாபத்துக்கோ பதவி விலகவில்லை. முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டே பதவி விலகத் தீர்மானித்தோம். அதனால் எமது கோரிக்கைகளை நிறை வேற்றிக்கொள்ளாமல் மீண்டும் அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதே நல்லது என்பதே எமது நிலைப்பாடு – என்றார். (ஐ)

## நீராவியடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு, அநுராதபுரம், வெலிஓயா பகுதியிலிருந்து மூன்று பஸ்களில் அழைத்துவரப்பட்ட சிங்கள மக்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச்சர்ச்சைக்குரிய ஆலயப் பகுதியில் இரண்டு தரப்பினரும் அமைதிக்குப் பங்கமின்றி வழிபாடுகளை மேற்கொள்ளமுடியும் என முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இதனிடையே, அனுமதியற்ற முறையில் நடப்பட்ட விகாரை பெயர்ப் பலகை மற்றும் பிள்ளையார் ஆலயப் பெயர்ப்பலகை ஆகியன வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் அகற்றப்பட்டன.

இந்நிலையில் விகாரை பெயர்ப்பலகை அகற்றப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும், பிள்ளையார் ஆலயச் சூழலுக்கு உரிமை கோரியும் சிங்கள மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## மிரட்டுகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இல்லாமல் சிரமப்படுகின்றனர் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

தொடரும் வரட்சியினால் விவசாய அழிவு ஏற்பட்டு வாழ்வாதார இழப்பு மற்றும் உணவு பற்றாக்குறையால் பெருமளவானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## நாட்டின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தம் எழுந்துகொண்டிருக்கின்றன.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பத்து இலட்சம் ரூபா நிதியில் கரவெட்டி புனித அந்தோனியார் தேவாலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட வழிபாட்டுப் பொருள்கள் விற்பனை நிலையமும் மறைபோதனைக்கூடமும் கொண்ட கட்டடம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்களின் தேவைகளை நிறைவேற்ற எம்மால் இயன்ற அனைத்துப் பணிகளையும் நாம் செய்வோம். குறுகிய காலத்துக்குள் – இந்த வருட இறுதிக்குள் பல நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தக்கூடியதாக இருக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

நாட்டிலே அரசியல் சூழ்நிலை ஒரு ஸ்திரமற்ற நிலையில் இருப்பது அனைவருக்கும் தெரியும். எப்போது என்ன நடக்கும்? என்ன தேர்தல் வரும்? அரசு சிக்குமா அல்லது கவிழ்ந்து விடுமா? என்றெல்லாம் பல கேள்விகள் நாளாந்தம் எழுந்துகொண்டிருக்கின்றன. எனினும், அவை ஒரு பக்கம் இருக்க, மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்கின்ற நிகழ்ச்சித் திட்டங்களிலேயே நாங்கள் எங்களுடைய கவனத்தைச் செலுத்தி அதனைச் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும் – என்றார். (ஐ)

## கடலில் நீராடச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தலைமன்னார் மேற்குப் பகுதியைச் சேர்ந்த இளங்குமரன் அஜேய் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்றுப் பகல் தனது நண்பர்களுடன் கிரிக்கெட் விளையாடிய பின் நண்பகல் தலைமன்னார் மேற்குக் கடல் பகுதிக்கு நீராடச் சென்றுள்ளார். இவர்கள் நீராடிக் கொண்டிருந்தபோது கடலில் நங்கூரமிடப்பட்டிருந்த படகைத் தொட்டுவிட்டு வருகின்றேன் என கூறிச் சென்றவேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணைகள் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

நீந்திச் சென்ற தமது நண்பன் காணாமல்போனதைத் தொடர்ந்து நண்பர்கள் கரையேறிக் கிராமத்தில் விடயத்தைத் தெரிவித்தனர். உடனடியாக மீனவர்கள் அடசு வலை மூலம் காணாமற்போன மாணவனைச் சடலமாக மீட்டுள்ளனர்.

தலைமன்னார் பொலிஸார் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

தென்மேற்கு பருவமழை ஓரளவு பெய்திருந்தாலும், அது எதிர்பார்த்தளவு நீரைச் சேமிக்க போதுமானதாக இருக்கவில்லை. குளங்கள், நீராதாரங்கள் நிரம்பப் போதுமானதாக இருக்கவில்லை. இதனால் நாட்டின் பெருமளவான பகுதிகளில் பெரும் வறட்சி ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் குடிதண்ணீர் இல்லாமல் போய்விட்டது. அன்றாடத் தேவைகள், விவசாயம், கால்நடைகளிற்கான நீர் இல்லாமல் பெரும் இயற்கைப் பேரிடரை இலங்கையும் எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது. ஏற்கனவே, இந்தியாவின் தமிழகத்தில் தண்ணீர்ப் பஞ்சம் பெரும் மனிதாபிமான பிரச்சினையாக உருவெடுத்துள்ள நிலையில், இலங்கையிலும் வறட்சியின் பிடி இறுக்கிக் கொண்டு செல்கிறது.

அண்ணளவாக 120,000 குடும்பங்களைச் சேர்ந்த 450,000 பேர் இந்த ஆண்டு ஜனவரியில் இருந்து குடிதண்ணீருக்கான சவாலை எதிர்கொண்டுள்ளனர்.

வறட்சி அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணங்களாக வடக்கு, கிழக்கு, தெற்கு, வடமத்திய, வடமேற்கு மாகாணங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் இடர் முகாமைத்துவப் பிரிவின் தகவலின்படி, மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் குடிதண்ணீர் தட்டுப்பாடு நிலவுகிறது. இங்கு 62,000 மக்களிற்காக 145,000 லீற்றர் நீரை இடர் முகாமைத்துவ பிரிவு வழங்கி வருகிறது. இதே நிலைமை இன்னும் 20 நாட்களுக்கு நீடித்தால், உணவு தயாரிக்கவும் நீரில்லாத நிலைமை ஏற்பட்டு, உலருணவு வழங்க வேண்டிய அபாயம் எழுந்துள்ளதாக இடர் முகாமைத்துவ பிரிவு தெரிவித்தது.

குடிதண்ணீர் தட்டுப்பாட்டை போக்க குழாய்க்கிணறுகளைப் பலர் ஆழமாக்கி வருகின்றனர் எனவும், இதனால் நிலத்தடி நீர் உவர்ப்பு போக்கு மன்னாரில் அதிகரித்துள்ளதாக முறைப்பாடுகள் கிடைப்பதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்ட இன்னொரு மாவட்டம் புத்தளம். இம்மாதம் அங்கு சுமார் 50 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியே பதிவாகியது. இது விவசாயம், நீர்த்தேவை எதையும் பூர்த்தி செய்யவில்லை.

இதேவேளை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களும் கடுமையான வறட்சியை எதிர்கொண்டுள்ளன. கிளிநொச்சி, முல்லைத்தீவில் கால்நடைகள் குடிநீரில்லாமல் உயிரிழக்க ஆரம்பித்துள்ளன. காட்டு விலங்குகள் குடிதண்ணீர் தேடி கிராமங்களுக்குள் புகுவது அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஒன்பது பிரதேச செயலக பிரிவுகளில் குடிதண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. 20,000 குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுகிறது. நான்கு பிரதேச செயலர் பிரிவுகள் கடும் வறட்சியை எதிர்கொள்ளும் அபாயம் எழுந்துள்ளது.

மட்டக்களப்பு இடர் முகாமைத்துவ பிரிவின் தகவலின்படி, மாவட்டத்தின் எட்டு பிரதேசசெயலர் பிரிவுகளில் 20,000 பேர் குடிதண்ணீர் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். இவர்களிற்கு 27 பௌசர்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்படுவதாக அந்த பிரிவு தெரிவித்தது.

பொலனறுவை, அநுராதபுரம், காலி மாவட்டங்களிலும் குடிதண்ணீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# பல பிரச்சினைகளுக்கு இப்போது 19 ஆவது திருத்தமே மூல காரணி!

## மஹிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 17

எம்மை பழிவாங்கும் நோக்கில் தூரநோக்கமற்ற விதத்தில் நல்லாட்சி அரசு உருவாக்கிய அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இன்று பல பிரச்சினைகளுக்கு மூல காரணியாக அமைந்துள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தங்காலை கால்டன் இல்லத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசின் இடைப்பட்ட பதவி காலத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் மக்களைப் பாதிக்கும் வகையில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் அரசின் தான்தோன்றித்தனமான செயற்பாட்டின் காரணமாக ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி அமைச்சரவையினை கூட்டவில்லை. இதற்கு 19 ஆவது அரசமைப்பின் ஊடாகவே வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

எம்மைப் பழிவாங்கும் நோக்கத்தில் தூரநோக்கமற்ற அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஏற்படும் எதிர்விளைவுகள் தொடர்பில் ஆராயாமல் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பல பிரச்சினைகளுக்கு இந்தத் திருத்தமே பிரதான காரணம். நிறைவேற்று துறைக்கும், சட்டவாக்க துறைக்கும் இன்று அதிகாரம் தொடர்பிலும் முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன.

தேர்தலின் ஊடாகவே ஆட்சி மாற்றம் ஏற்படும். இடம்பெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலை தொடர்ந்து காலம் தாழ்த்தப்பட்டுள்ள மாகாண சபை தேர்தலே இடம்பெற்றிருக்க வேண்டும்–என்றார். (ஐ)

# ஐ.தே.கவில் அத்தநாயக்க மீளவும் இணைய முடியும்!

## அகிலவிராஜ் காரியவசம் அழைப்பு





கொழும்பு, ஜூன் 07

திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்கு விரும்பினால் தாராளமாக இணைய முடியும் என்று கல்வி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளருமான அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் இணையவுள்ளார் என்று கதை அடிபடுவது பற்றி அவரிடம் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க கட்சியில் மீண்டும் இணைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. அவரை விடவும் மிகவும் மோசமாகத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விமர்ச்சித்தவர்கள் எல்லோரும் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளார்கள். அவர் விரும்பினால் இணையலாம்.

அவர் கட்சிக்கு அதிக சேவைகள் செய்தவர். அவரது சேவையை நாம் மதிக்கின்றோம். ஐக்கிய தேசியக் கட்சி ஜனநாயகக் கட்சி. எவரையும் விமர்சிக்கும் உரிமை அனைவருக்கும் உண்டு – என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த திஸ்ஸ அத்தநாயக்க, 2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மஹிந்த பக்கம் தாவினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளரை ஒக.1 அறிவிக்கவுள்ளாராம் மஹிந்த!

கொழும்பு, ஜூன் 17

ஓகஸ்ட் மாதம் முதலாம் இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய பொது கூட்டத்தின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உள்ளிட்ட கட்சிகள் தேர்தலுக்குத் தயாராகவுள்ளோம். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி கட்சியின் தேசிய பொது சம்மேளனம் கூடவுள்ளது. இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வேட்பாளர் குறித்த அறிவிப்பை வெளியிடுவார்–என்றார். (ஐ)

# கைது செய்யப்பட்ட சந்தேகநபர் மரணம்

கொழும்பு, ஜூன் 17

ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரொருவர் உடல் நலக் குறைவால் உயிரிழந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன் தினம் வெல்லம்பிட்டி– நாகஹமுல்ல பிரதேசத்தில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் இந்தச் சந்தேகநபர், கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு, சிறையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், திடீரென ஏற்பட்ட உடல் நலக் குறைவின் காரணமாக, அவரை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் பொலிஸார் அனுமதித்தனர்.

எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ஐ)

# காணாமற்போன பாடசாலை மாணவி நீர்த்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்பு!

## கொலையா? தற்கொலையா? என பொலிஸார் தீவிர விசாரணை



கொழும்பு, ஜூன் 17

மூன்று நாள்களாகக் காணாமற்போயிருந்த பதுளையிலுள்ள பிரபல பாடசாலை மாணவி ஒருவர் நேற்றுக் காலை நீர்த்தேக்கத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பதுளை, மெதபத்தன பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய லக்சிகா மதுவந்தி என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

கடந்த 14ஆம் திகதியன்று குறித்த மாணவி காணாமல்போயிருந்த நிலையில், அவரது உறவினர்கள் கந்தகெட்டிய பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்திருந்தனர்.

இதையடுத்துப் பொலிஸாரும் பிரதேச மக்களும் ஒன்றிணைந்து மேற்கொண்ட தேடுதலின்போது குறித்த மாணவி பயன்படுத்தியிருந்த பொருள்கள் சில லொங்கல்ல நீர்த் தேக்கத்துக்கு அருகிலுள்ள புதர் ஒன்றுக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இதன்போது அங்கு தொடர்ந்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது, மாணவியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவி தற்கொலை செய்துகொண்டுள்ளாரா அல்லது கொலை செய்யப்பட்டுள்ளாரா என்பது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக, அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை
கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள்
பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும்.
நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை



20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, மாநகரசபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536

நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற் லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576
கிளிநொச்சியில் – இல.10, கண்டி வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (தம்ரோ காட்சியறை அருகில்). 076 443 1576

முதலீட்டாளர் கருத்துக்களம் – யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11.30 வரை

Tilko Jaffna City Hotel - Jaffna

அனுமதி இலவசம்

பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப் பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.

முன் பதிவுகளுக்கு :-
021 2221455
0777822014
0777105205

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 17.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.